வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 01 | 06.08.2021 வெள்ளிக்கிழமை | இதழ் : 245 | பக்கங்கள் : 16

# வேகமாக பரவும் வைரஸ் மேலும் 94 பேர் உயிரிழப்பு

## நேற்று 2,669 பேருக்கு தொற்று உறுதி; 4 வைத்தியசாலைகள் அவசர நிலையில்

கொழும்பு, ஓகஸ்ட் 06

கொரோனா டெல்டா வைரஸ் நாடு முழுவதிலும் வேகமாகப் பரவிவரும் நிலையில் நேற்றுமுன்தினம் மட்டும் 94 பேர் மரணமடைந்தனரென சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்றிரவு அறிவிக்கப்பட்டது. இதன்மூலம் இலங்கையில் கொரோனா வைரஸினால் மரணமடைந்தவர்களின் தொகை 4 ஆயிரத்து 821 ஆக அதிகரித்துள்ளது. 15

### 09 மாத குழந்தை உட்பட

# யாழ்.குடாநாட்டில் 97 பேருக்கு தொற்று!

யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்.மாவட்டத்தில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் 09 மாதக் குழந்தை உட்பட 97 பேருக்கு நேற்று கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.பல் கலைக்கழக ஆய்வுகூடங்களில் மேற்கொள் ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் 15

## "வடக்கு மீனவர்களின் அழிவை வேடிக்கை பார்க்கிறது அரசு!"

கொழும்பு, ஓக. 06

இந்திய மீனவர்களின் அத்துமீறிய மீன்பிடி செயல்பாடுகளால் வடக்கு மீனவர்களுக்கு மிகப் பெரும் சொத்து அழிவு ஏற்பட்டுள்ளது. மறுபுறம் கடல் அட்டை பண்ணைகளை உருவாக்கி எமது கடல் வளங்களை அழிக்கும் செயல்பாடுகள் முன் னெடுக்கப்படுகின்றன. அரசாங்கம் திட்டமிட்டே வடக்கின் அழிவுகளை வேடிக்கை பார்க் கிறது.

இவ்வாறு பாராளுமன்றத்தில் குற்றஞ் 15

## யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கொரோனா தொற்றால் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஓக. 06

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர் என்று போதனா வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த ஏழாலையைச் 15

## சிகிச்சை பெறும் தொற்றாளரைவிட 5 மடங்கு தொற்றாளர் சமூகத்தில்

### மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 06

வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் கொரோனா தொற்றா ளர்களை விட 5 மடங்கு கொரோனா தொற்றாளர்கள் சமூகத்தில் இருக்கலாம் என இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார். 15

# இலங்கை முழுவதும் கொரோனா மிகத்தீவிரமாக பரவி வருகின்றது

### வடக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் தகவல்

கொழும்பு, ஓக. 06

இலங்கை முழுவதும் தற் போது கோவிட்-19 மிகத் தீவிரமாக பரவி வருகின்றது. இறப்புக்களின் எண்ணிக்கையும் அதிகரித்து செல்கின்றது. இறந் தவர்களில் பெரும்பாலானவர் கள் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளத் தவறியவர்களாக காணப்படுகின்றனர் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்தப் பரம்பலை கட்டுப் படுத்த பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ள மூன்று வழிகளே உள் ளன. 15

# தடுப்பூசி பெற்றுக்கொண்ட தமிழ் அரசியல் கைதிகள்

கொழும்பு, ஓக. 06

கொழும்பு புதிய மகசின் சிறைச்சாலையில் உள்ள அனைத்து கைதிகளுக்கும் 'சினோபாம்' தடுப்பூசி நேற்றைய தினம் ஏற்றப்பட்டது.

இந்த வகையில் மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 36 தமிழ் அரசியல் கைதி 15

# 10 நாட்களில் 591 பேர் மரணம் 21,344 பேருக்கு கொரோனா!

### அமைச்சர் பவித்ரா தகவல்

கொழும்பு, ஓக 06

இலங்கையில் கடந்த 10 நாட் களில் மட்டும் கொரோனா தொற்றுக்கு உள்ளான 21 ஆயிரத்து 344 பேர் அடையாளம் காணப்பட் டுள்ளனர். அத்துடன், 591 பேர் உயிரிழந்தனரெனத் தெரிவித்த சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, கொரோனா வின் அலை ஏற்படுவது குறித்து சரியாக குறிப்பிட முடியாதுள்ளதாகவும் கூறி னார்.

## திருவிழாவில் பங்கேற்ற 100 பேருக்கு தொற்று

மட்டக்களப்பு, ஓக. 06

மட்டக்களப்பு களுவங் கேணி மாரியம்மன் கோயில் திருவிழாவில் கலந்துகொண்ட கோயில் தலைவர், செய லாளர், குருக்கள் உட் பட 100 பேருக்கு 15



# ஹிஷாலினியின் மரணத்தில் குற்றவாளி யாராக இருந்தாலும் தண்டிக்க வேண்டும்

### பாராளுமன்றத்தில் ரிஷாத் பதியுதீன் உரை

கொழும்பு, ஒக். 06

ஹிஷாலினியின் மரணம் 31 வயதில் புற்றுநோயால் மரண மான எனது தங்கையின் மர ணத்துக்கு நிகரானது. அவரை இழந்தபோது அடைந்த துன் பத்தையும் வேதனையையும் ஹிஷாலினியின் மரணத்திலும் அடைகின்றோம்.எனவே, ஹிஷா லினியின் மரணத்தில் எவராவது குற்றவாளி யாக காணப்பட்டால் 15

# அரச ஊழியர்களை இரண்டு பிரிவாக வேலைக்கு அழைப்பதற்கு தீர்மானம்

### இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண அறிவிப்பு

கொழும்பு, ஓக. 06

அரச ஊழியர்களை நிறுவன பிரதானியின் தீர்மானத்தின் பிரகாரம் வாரத்துக்கு இரண்டு பிரிவுகளாக வேலைக்கு அழைக்க முடிவெடுக்கப்பட் டுள்ளது. திங்கள், செவ்வாய், புதன்கிழமைகளில் ஒரு குழு வினரும், வியாழன், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மற் றொரு குழுவினரும் சேவைக்கு சமூகம் அளிப்பதற்கான ஒழுங்கை மேற்கொள்ளும் தீர்மான மும் எடுக்கப்பட்டது.

இதுதொடர்பிலான 15

# இப்படியும் நடக்கிறது...!

நீண்ட காலத்திற்குப் பின்னர் நண்பர்கள் இருவர் சந்தித்துக் கொண்டனர். இருவரும் சுவையாக நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தனர். பேச்சின் இடையே ஒருவர் மற்றவரிடம் கேட்டார்,

"இப்ப எத்தினை வயதாகிறதடாப்பா", என்று.

மற்றவர் சொன்னார், "நாற்பது வயது", என்று.

"ஐந்து வருசங்களுக்கு முன்னர் சந்தித்தபோதும் நாற்பது வயது எண்டுதான் சொன்னதாக ஞாபகம்", என்றார் மற்றவர். "உங்களுக்கு வயது கூடுறதில்லைப் போல...", என்றார்.

"நான் சொன்ன சொல் மாறாதவன். ஒரு தடவை சொன்ன சொல்லை மாற்றிச் சொல்லும் ஈனப்புத்தி எனக்குக் கிடையாது", என்று சிரித்துக் கொண்டே கூறினார் மற்றையவர்.

கொழும்பில் இந்திய பத்திரிகையாளர் ஒருவரைச் சந்திக்க முடிந்தது. நீண்டகாலமாகக் கொழும்பில் இருப்பவர் அவர்.

ஈழத்தமிழர் பிரச்னைகளை நம்மைவிட அதிகம் தெரிந்து வைத்திருப்பவர். வட்டுக்கோட்டைத் தீர்மானம் எத்தனையாம் திகதி நிறைவேற்றப்பட்டது என்பதிலிருந்து திம்பு பேச்சில் முன்வைக்கப்பட்ட தீர்வு யோசனை வரை அவருக்கு அத்துபடி. திம்பு யோசனை என்று எழுதும்போதுதான், இந்தச் சம்பவம் ஞாபகத்திற்கு வருகின்றது.

ஒரு தடவை ஈ. பி. ஆர். எல். எவ். பத்மநாபா அணியின் தலைவரான தோழர் சுகுவிற்கு ஓர் இளம் பத்திரிகையாளர் தொலைபேசி அழைப்பு எடுத்திருக்கிறார். "அண்ணே இந்த திம்பு யோசனைகள் எண்டால் என்ன?' என்று கேட்டிருக்கிறார்.

அவர் ஒவ்வொரு யோசனையாக சொல்லிக்கொண்டிருந்தபோது, "இதெல்லாம் தெரியும் அண்ணே, நான் கேட்டது திம்பு யோசனை எண்டால் என்ன எண்டெல்லோ", என்றிருக்கிறார்.

பூட்டான் தலைநகர் திம்புவில் இலங்கை அரசுக்கும் தமிழர் தரப்பிற்குமிடையே நடந்த பேச்சில் முன்வைக்கப்பட்ட யோசனைகளைத்தான் திம்பு யோசனைகள் என்கிறோம் என்பதே அந்த ஊடகருக்கு தெரியவில்லை. இது ஒரு தடவை தோழர் சுகு, தொலைக்காட்சி பேட்டி ஒன்றில் தெரிவித்தது.

இந்த இலட்சணத்தில்தான் நாமும் நமது ஊடகவியலும் இருந்துகொண்டிருக்கிறது. இனி, விசயத்திற்கு வருவோம்.

அந்தத் தமிழக பத்திரிகையாளர், தனது மனவேதனைகளை கொட்டித்தீர்த்தார்.

"ஈழத்தமிழ் மக்கள்தான் பாவம்", என்றார்.

எனக்கு எதற்காக சொல்கிறார் என்பது புரியவில்லை.

"நீங்களும் எத்தனை தடவைகள் திரும்பத்திரும்ப எழுதுகிறீர்கள். இந்த மாகாண சபைகளை நமது தீர்வாக ஏற்றுக்கொண்டு, அரசியலமைப்பில் மாகாண சபைகளுக்கு இருக்கும் அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டு முன்செல்ல வேண்டும் என்று. ஆனால், யாரும் கண்டுகொள்வதாகத் தெரியவில்லையே", என்றார்.

இதைத்தான் தமிழ் மக்கள் பாவம் என்று சொல்கிறார் என்பது புரிந்தது.

"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பிரிக்கப்படாத நாட்டுக்குள் சமஷ்டி என்கிறது. கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கட்சி ஒரு நாடு இரு தேசம் என்கிறது. எல்லாம் நல்லதுதான். இவற்றில் எது கிடைத்தாலும் நல்லதுதான். ஆனால், அதற்காக காத்திருக்கும்வரை கிடைப்பதை எடுத்துக்கொண்டு அதற்காக காத்திருப் பதில் என்ன தவறு என்று அவர்கள் நினைக்கிறார்கள்", என்று அவர் என்னிடம் கேட்டபோது, என்னிடம் பதில் இல்லை.

"எனக்கும் அதுதான் புரியவில்லை", என்றேன்.

"இப்போது போதாக்குறைக்கு சிலர் வட்டுக்கோட்டைத் தீர்மானம் -2 என்ற இயக்கத்தை ஆரம்பித்திருக்கிறார்களாம்", என்றார்.

அவருக்கு மேலேயுள்ள கதையைக் கூறிவிட்டு, எங்கள் தலைவர்கள், "சொன்ன சொல் மாறாதவர்கள். ஒரு தடவை சொன்ன சொல்லை மாற்றிச் சொல்லும் ஈனப்புத்தி அவர்களுக்குக் கிடையாது", என்று சிரித்துக் கொண்டே சொன்னேன்.

இதைவிட அவருக்கு வேறுஎதுவும் சொல்வதற்கு என்னிடம் பதில் இல்லை.

**- ஊர்க்குருவி**

# உடுவிலில் 5 சிறுமிகள் உட்பட 15 தொற்றாளர்

யாழ்ப்பாணம், ஓக. 06

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 16 வயது சிறுமிகள் ஐந்து பேர் உட்பட 15 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழக ஆய்வு கூடத்தில் மேற்கொள்ளப்பட்ட பி. சி. ஆர். பரிசோதனையில் குறித்த தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 31பேரின் மாதிரிகள் நேற்று பி. சி. ஆர். பரிசோதனைக்கு உட்படுத்தப் பட்டன. இதிலேயே, 15 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

## பால் மா பதுக்கிய மூவருக்கு வழக்கு!



யாழ்ப்பாணம், ஓக. 06

வட மாகாணத்தில் பால்மா பதுக்கியது தொடர்பில் 3 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வட மாகாண பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் பிராந்திய அலுவல்கள் பதில் உதவிப்பணிப்பாளர் எ.எல். ஜவ்பார் சாதிக் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் வெளிநாட்டிலிருந்து இறக்குமதியாகும் பால் மா வகை, உள்நாட்டில் தயாரிக்கப்படும் பால் மா வகைக்கு தட்டுப்பாடு நிலவுகின்றது.

இது தொடர்பில் நடத்தப் பட்ட விசாரணைகளிலேயே பால்மாவை பதுக்கிய மூன்று வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடக்கு மாகாணம் முழுவதும் இது தொடர்பில் வடக்கு மாகாண பாவனையாளர் அலுவலர்கள் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

உங்கள் பிரதேசத்தில் பால் மா தட்டுப்பாடு, பதுக்கல் தொடர்பில் அருகேயுள்ள பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபை அலுவலகத்தில் முறைப்பாடு செய்யுமாறும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## இளைஞரை கட்டிவைத்து தாக்கிவிட்டு தப்பியது குழு!

யாழ்ப்பாணம், ஓக. 06

வீதியால் சென்றவரை கட்டிவைத்து தாக்கிவிட்டு மர்ம நபர்கள் குழு தப்பிச் சென்றுள்ளது. இதில் காயமடைந்த அந்த இளைஞர் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று காலை அதிகாலை 5.30 மணியளவில் வட்டுக்கோட்டை டச்சு வீதியில் இடம்பெற்றுள்ளது.

கட்டப்பட்ட நிலையில் தலையில் காயமடைந்து வீதியில் கிடந்தவரை மீட்ட பிரதேச இளைஞர்கள் அவரை மருத்துவமனையில் சேர்ப்பித்தனர். (ஐ)

கல்வி TV CHANNEL-1

**06.07.2021 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | தமிழ் |
| 06.00 | தரம்-07 | விஞ்ஞானம் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | தமிழ் |
| 08.15 | தரம்-10 | வரலாறு |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | வர்த்தகம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | சித்திரம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறுஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | வரலாறு |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | தகவல் தொடர்பாடலும் தொழில்நுட்பமும் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | விவசாய விஞ்ஞானம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | வர்த்தகம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | வரலாறு |

கல்வி TV CHANNEL - 2

**06.07.2021 வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | English |
| 09.45 | தரம்-03 | அழகியல் |
| 10.30 | தரம்-03 | கணிதம் |
| 11.15 | தரம்-04 | English |
| 12.30 | தரம்-04 | கணிதம் |
| 01.15 | தரம்-05 | Singalam |
| 02.00 | தரம்-05 | கணிதம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | English |
| 06.00 | தரம்-03 | அழகியல் |
| 06.45 | தரம்-03 | கணிதம் |
| 07.30 | தரம்-04 | English |
| 08.15 | தரம்-04 | கணிதம் |
| 09.00 | தரம்-05 | சிங்களம் |
| 09.45 | தரம்-05 | கணிதம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | அழகியல் |
| 12.30 | தரம்-03 | கணிதம் |
| 01.15 | தரம்-04 | English |
| 02.00 | தரம்-04 | கணிதம் |
| 02.45 | தரம்-05 | Singalam |
| 03.30 | தரம்-05 | கணிதம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

ஈழநாடு
Eelanadu
06.08.2021 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், ஆடி 21

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk
தொலைபேசி : 021 730 1370

## யார் - யாருடைய முகவர்கள்?

சில தினங்களுக்கு முன்னர் தமிழ்நாட்டில் வட்டுக்கோட்டை - 2 என்னும் அடிப்படையில் ஒரு நிகழ்வு இடம்பெற்றிருந்தது. இதன் இறுதியில் இந்தியாவின் தலையீட்டைக்கோரி, இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைக்க தீர்மானிக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. இந்த நிகழ்வின் தலைப்பு தொடர்பில் ஏற்பட்ட சர்ச்சைகளினால் தமிழர் தாயகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பிரதான தமிழ்த் தேசியக் கட்சிகள் எவையும் இதில் பங்குகொள்ளவில்லை. ஏனெனில், வட்டுக்கோட்டை என்பது 1976 இல் பிரிந்து சென்று தனியரசை நிறுவுதல் என்னும் அடிப்படையில் முன்வைக்கப்பட்ட பிரேரணை.

இதனடிப்படையில், 1977 பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, தமிழர் விடுதலைக் கூட்டணி அமோக வெற்றியையும் பெற்றுக்கொண்டது. இது பழைய கதை. இதற்கு பின்னர் எந்தவொரு மிதவாத தலைமையும் வட்டுக்கோட்டை தீர்மானம் தொடர்பில் பேசியதில்லை. அதனை முன்வைத்து அரசியலையும் முன்னெடுக்கவில்லை. ஆறாவது திருத்தச்சட்டம் இதற்கு ஒரு தடையாக இருப்பதாக சிலர் கூறிக்கொண்டாலும்கூட, அது உண்மையல்ல. ஏனெனில், ஒரு கட்சி ஒரு நிலைப்பாட்டை முன்வைத்தால் அதனை அடைவதற்கான வழிமுறைகளை கொண்டிருக்க வேண்டும். 1976 வட்டுக்கோட்டை தீர்மானத்தை முன்வைத்த தமிழர் விடுதலை கூட்டணியிடம் தனிநாட்டை அடைவதற்கு எந்தவொரு வழிமுறையும் இருக்கவில்லை. இந்த நிலையில்தான் ஆயுதம் தாங்கிய இயக்கங்கள் தனிநாட்டு கோரிக்கையை தத்தெடுத்துக் கொண்டன. இது பழைய கதை.

வட்டுக்கோட்டை - 2 தீர்மானம் தொடர்பில் பேசியிருப்பவர்கள் எந்த அடிப்படையில் இதனை முன்வைத்தார்கள் என்பதில் குழப்பங்கள் இருந்தாலும்கூட, இந்தியாவின் தலையீட்டை கோரும் நோக்கம் அவர்களின் முயற்சிக்கு பின்னால் இருந்திருக்கின்றது. அவர்களின் பிரகடனம் இதனைத் தெளிவுபடுத்துகின்றது. நீண்ட காலமாக இந்திய எதிர்ப்புக்கான வாய்ப்புக்களை தேடிக் கொண்டிருந்தவர்களின் வாயில் இந்த விடயம் தற்போது அவலாகியிருக்கின்றது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் இந்த நிகழ்வு இந்தியாவிற்கு மீண்டும் தலையிடுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டதாக குறிப்பிட்டிருக்கின்றார். இதன் காரணமாகவே தாங்கள் இதில் பங்குகொள்ளவில்லை என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால், கூட்டமைப்போ அல்லது விக்னேஸ்வரன் அணியோ அவ்வாறு குறிப்பிடவில்லை. அவ்வாறாயின், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி இந்தியாவிற்கு மீண்டும் வாய்ப்புக்கள் கிடைத்துவிடக்கூடாதென்றா கருதுகின்றது?

இதேவேளை இந்தியாவும், இந்தியாவின் முகவர் அமைப்புக்களும் 13ஆவது திருத்தச்சட்டத்தை வலியுறுத்தி வருவதாகவும், அதனை தாம் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் முன்னணியின் செயலாளர் குறிப்பிட்டிருக்கின்றார். இந்த இடத்தில் எழும் கேள்வி - 13ஆவது திருத்தச் சட்டத்தை ஓர் ஆரம்பப்புள்ளியாக ஏற்றுக்கொள்ளலாம் என்று கூறுபவர்கள் அனைவரும் இந்தியாவின் முகவர்கள் என்றால், 13ஆவது திருத்தச் சட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது, அதில் பயனில்லை என்று கூறுபவர்கள் யாருடைய முகவர்கள்?

இந்தியா 13ஆவது திருத்தச் சட்டத்தை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றது. இந்தியாவைப் பொறுத்தவரையில் அவ்வாறுதான் கூறவும் முடியும். ஏனெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மட்டும் தான் இந்தியாவினால் தமிழர் விடயத்தில் தலையீடு செய்ய முடியும். இந்த விடயம் மறுபுறமாக தற்போதுள்ள பொதுஜன பெரமுன அரசாங்கத்திற்கு ஒரு பெரும் நெருக்கடியாக மாறியிருக்கின்றது. ஏனெனில், 13ஆவது திருத்தச் சட்டத்தை நிரந்தரமாக இல்லாமலாக்க வேண்டும் என்பதிலேயே ராஜபக்‌ஷக்களின் அரசாங்கம் கரிசனை கொண்டிருக்கின்றது. இவ்வாறானதொரு பின்புலத்தில் - தமிழர் பக்கத்திலிருந்து 13ஆவது திருத்தம் மற்றும் மாகாண சபை முறைமை எதிர்க்கப்படுமாக இருந்தால், அதன் இறுதிப் பயனை யார் அறுவடை செய்வார்கள்? இந்த அடிப்படையில் நோக்கினால், 13ஆவது திருத்தச் சட்டத்தை - மாகாண சபையை எதிர்ப்பவர்கள் யாருக்கு சேவகம் செய்கின்றனர் - அவர்கள் யாருடைய முகவர்கள்?

# கொழும்பில் 'ஏரோ புளொட்' நாட்கள்!

அலசுவது இராஜதந்திரி

இலங்கைக்கும் ரஷ்யாவுக்குமிடையே நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ரஷ்யாவின் தேசிய விமான சேவையான 'ஏரோ புளொட்' கொழும்புடனான தனது விமான சேவையை மீளவும் ஆரம்பிக்கப் போவதாக அறிவித்துள்ளது. 'ஏரோ புளொட்' என்ற பெயரைக் கேட்டதுமே இலங்கையில் எண்பதுகளில் ஆரம்பமான வடக்கு - கிழக்கு யுத்தமும், இந்த இரு மாகாணங்களில் இருந்தும் சாரை, சாரையாக ஆயிரக்கணக்கில் மக்கள் நாட்டை விட்டு வெளியேறியமையுமே நினைவுக்கு வருகின்றது.

கொழும்பில் எண்பதுகளின் நடுப்பகுதியிலும் பின்னர், தொண்ணூறுகளிலும் பல்வேறு வெளிநாட்டு பயண முகவர் நிலையங்கள் இயங்கி வந்தன. இவற்றை யாழ்ப்பாணத்தை சேர்ந்தவர்களே நடத்தி வந்தனர். அத்தோடு, வெளிநாடுகளுக்கு குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு வடக்கு - கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளை அனுப்பி வைப்பதில் இந்த முகவர் நிலையங்கள் முனைப்பாக இருந்தன.

அப்போது சிக்கனமான பயணத்துக்கு ஏதுவாகவும் அதேசமயம், ஐரோப்பிய நகரங்கள் பலவற்றையும் கொழும்புடன் பெரிதும் இணைத்திருந்த பிரபலமான விமான சேவையாகவே ரஷ்யாவின் 'ஏரோ புளொட்' விமான சேவை விளங்கியிருந்தது.

இதன் காரணமாக வடக்கு - கிழக்கிலிருந்து ஆயிரக்கணக்கில் புலம்பெயர ஆரம்பித்த வடக்கு - கிழக்கு மக்களுக்கு ஐரோப்பிய நாடுகளை சென்றடைவதற்கு ரஷ்யாவின் 'ஏரோ புளொட்' விமான சேவையே வரப்பிரசாதமாக அமைந்திருந்தது.

**கொழும்பில் 'ஏரோ புளொட்'**

அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்பட்ட பயண முகவர் நிலையங்கள் விரிவான வலைப்பின்னல் அமைப்பை கொண்டிருந்தன. ரஷ்யாவின் 'ஏரோ புளொட்' நிறுவனத்தின் ரஷ்ய அலுவலர்கள் கொழும்பிலிருந்த பயண முகவர்களோடு நெருக்கமான தொடர்புகளை கொண்டிருந்தனர். 'ஏரோபுளொட்' விமான சேவை அலுவலர்களோடு மட்டுமல்ல. அவ்விமான சேவையின் விமானிகள், சிப்பந்திகள்கூட இலங்கையை விட்டு வெளியேற முன்வந்தவர்களை ஐரோப்பிய நகரங்களுக்கு கொண்டு சென்று விடுவதில் கொழும்பிலிருந்து இயங்கிய பயண முகவர்களோடு நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தனர்.

'ஏரோ புளொட்' விமான சேவையைச் சேர்ந்தோர் கொழும்பிலிருந்து இயங்கிய பயண முகவர்களோடு நெருக்கமாக ஒத்துழைத்தமைக்குக் காரணம் அன்றைய காலகட்டத்திலேயே பலமான ஒரு கம்யூனிஸ நாடாக பல மாநிலங்களையும் உள்ளடக்கியிருந்த சோவியத் யூனியன் படிப்படியாக ஆட்டம் காண ஆரம்பிதிருந்தது. பின்னாளில் ரஷ்ய அதிபராக இருந்த மிக்கேல் கோபச்சேவினால் அறிமுகப்படுத்தப்பட்ட பெரஸ்டிரொய்க்கா என்ற புதிய அரசியல், பொருளாதார கொள்கையும் சோவியத் யூனியனில் நிலைபெறத் தொடங்கியது. இதன்காரணமாக சோவியத் யூனியனில் இருந்த மக்கள் பலத்த நெருக்கடிகளுக்கு உள்ளாகியிருந்தனர்.

எனவே, 'ஏரோ புளொட்' விமான சேவையைச் சேர்ந்தவர்களுக்கு கொழும்பு நகரம் ஒரு தங்கச் சுரங்கமாகவே விளங்கியிருந்தது. 'ஏரோ புளொட்'டின் விமான சேவையைச் சேர்ந்த ரஷ்ய சிப்பந்திகளுக்கு தமிழில்கூட ஓரளவு உரையாடக்கூடியளவுக்கு வடக்கு - கிழக்கு தமிழர்களை ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றிச்செல்லும் பணிகள் மிக விரிவாகவே கொழும்பிலிருந்து ரஷ்யர்களால் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**கொழும்பில் ரஷ்யர்கள்**

இதேவேளை தொண்ணூறுகளின் ஆரம்பத்தில் அன்றைய சோவியத் யூனியன் ஆட்டம் காண ஆரம்பித்ததையடுத்து ரஷ்யர்கள் பலர் தமது சிறியளவிலான உள்ளூர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு கொண்டு சென்று விற்பனை செய்து பணம் சம்பாதிப்பதிலும் ஈடுபட்டிருந்தனர். அவ்வாறு வெளிநாடுகளுக்கு சென்ற ரஷ்யர்களில் சிலர், கொழும்பு வந்து கோட்டையில் அமைந்துள்ள உலக சந்தை என்ற அங்காடி வியாபார ஸ்தலத்திலும் தமது பொருட்களை விற்பனை செய்திருந்தனர்.

அதேவேளை கொழும்பில் யாழ்ப்பாணத்தவர்களால் நடத்தப்பட்டுவந்த வெளிநாட்டுப் பயண முகவர் நிலையங்களை யாழ்ப்பாணத்திலிருந்து வந்து 'மொய்த்துப் பிடித்து' நாட்டை விட்டு வெளியேறுவதற்கு முண்டியடித்துக் கொண்டு நின்றவர்களின் கதைகளும் பரிதாபகரமாகவே இருந்தன.

**யாழ்ப்பாணத்தில் கெடுபிடி**

கல்விக்காகவும், தொழில் மற்றும் வர்த்தக நடவடிக்கைகளின் பொருட்டுமே யாழ்ப்பாண இளைஞர்கள் அன்று யாழ்ப்பாணத்தை விட்டு நாட்டின் ஏனைய இடங்களுக்கு சென்றிருந்தனர். ஆனால், எண்பதுகளின் நடுப்பகுதியிலும் பின்னர் தொண்ணூறுகளிலும் யாழ்ப்பாணத்தில் சுற்றிவளைப்புகள் அதிகரித்து தீவிரவாத நடவடிக்கைகளோடு சம்பந்தப்பட்டவர்கள் தங்கியிருந்த வீடுகள் கட்டடங்கள் என்று சந்தேகிக்கப்பட்டவை கூட இராணுவத்தினரால் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டன. அத்துடன், விமான குண்டு வீச்சுகள் மூலமாகவும் சந்தேகத்துக்கிடமான கட்டடங்கள் அழிக்கப்பட்டன.

இக்காலகட்டத்தில் கொழும்பு பக்கமே 'தலை வைத்துப்படுத்தறியதாதவர்களும்' கொழும்பு நோக்கி படையெடுத்து வந்து ரஷ்யாவின் 'ஏரோ புளொட' விமன சேவையே அடைக்கலமென நாட்டைவிட்டு வெளியேறியிருந்தனர்.

இத்தகைய பின்னணியில் மீளவும் ரஷ்யாவின் 'ஏரோ புளொட்' விமான சேவை கொழும்பு நோக்கி ஆரம்பமாகவிருக்கின்றதென்ற செய்தி சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னார் வடக்கு - கிழக்கிலிருந்து நாட்டைவிட்டு வெளியேறியவர்களையே மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
மற்றவர்களின் பாராட்டு அதிகரிக்கும். வெற்றி கூடும். நீங்கள் கடுமையாகப் பேசினாலும் சிலர் இயல்பாக எடுத்துக்கொள்வர். ஆரோக்கியத்தைக் கெடுக்கும் தீய பழக்கத்தை விட்டெறியுங்கள்.

**இடபம்**
ஒரு விஷயத்துக்கு எதிர்பார்த்ததைவிடச் செலவு குறையும். பக்தி உணர்வு அதிகரிக்கும். கருணையால் பிறருக்கு உதவுவீர்கள். சகோதரவழியில் நன்மை. பெற்றோரின் உடல்நிலை சீராகும்.

**மிதுனம்**
எதிர்பார்த்த நற்செய்தியால் குடும்பத்தில் சந்தோஷம் கூடும். திடீர் அதிர்ஷ்டம் கதவைத் தட்டும். மனக் கவலைகள் தீரும். நல்ல செய்தி காதில் விழும். பயணம் செல்ல உகந்த நாள்.

**கடகம்**
தேவையற்ற கற்பனைகள் வேண்டாம். திட்டமிட்ட பணி ஒன்று நடந் தேறும். வருமானத்தில் மாற்றம் இல்லை. நீண்ட கால முயற்சியில் வெற்றி கிட்டும். உழைப்பு பலன் தரும்.

**சிம்மம்**
நண்பர்களால் ஏற்பட்ட தொல்லை அகலும். உடல் நிலை மேம்படும். தாயின் உடல் நலம் சீராகும். நல்லவர்களின் அறிமுகத்தால் நன்மை. மனதில் நிதானமும் அமைதியும் ஏற்படும்.

**கன்னி**
செலவு அதிகரிக்கும். வேற்று மொழி பேசுவோரின் நட்பு கிடைக்கும். மனதில் குதூகலம் நிலவும். சிலர் மீது உங்களுக்கிருந்த கோபம் தீரும். பணிச்சுமை குறையும்.

**துலாம்**
நம்பிக்கையோடு செயல்படுங்கள். பிரபலமானவர்களின் நட்பு கிடைக்கும். இழந்த பொருள் கிடைக்கும். குடும்பத்தினரின் அன்பும் ஆதரவும் சேரும். முயற்சித்து தோல்வியை வெற்றியாக்குவீர்கள்.

**விருட்சிகம்**
சருமப் பாதுகாப்பில் அக்கறை தேவை. தீய பழக்கங்களை உதறுங்கள். வெளிநாட்டிலிருந்து நற்செய்தி வரும். சகோதரர் ஆதரவு கூடும். நிதானம் தேவை. எதிரியால் தொல்லை குறுக்கிடலாம்.

**தனுசு**
வழக்கத்தைவிட அதிகம் பேசுவீர்கள். சுபவிஷயத்தில் நல்ல முடிவு. நம்பிக்கை, தர்ம சிந்தனை வளரும். நற்செயல்களில் ஈடுபடுவீர்கள். உழைப்புக்கேற்ப வருமானம் அதிகரிக்கும்.

**மகரம்**
நாம் உண்டு நம் வேலை உண்டு என்றிருப்பது நல்லது. எதிர்பாலினத்தினரிடம் பழகும் போது அதிக கவனம் தேவை. ஆணவ எண்ணம் வேண்டாம். ஆதிக்க மனப்பான்மை கூடாது.

**கும்பம்**
கோபத்தைக் கட்டுப்படுத்தி நல்ல பெயர் எடுப்பீர்கள். முன் யோசனையுடன் செயல்பட்டு தொல்லையிலிருந்து தப்புவீர்கள். உங்களை மாற்றிக் கொள்ளும் முயற்சியில் வெற்றி காண்பீர்கள்.

**மீனம்**
சிலரை வேண்டாம் என்று ஒதுக்குவதை தவிர்க்கவும். நிதானம் தேவை. உறவினர்களிடம் மனம் விட்டுப் பேசி மகிழ்வீர்கள். மனமாற்றம் வரும். கடந்த கால உழைப்பிற்கு பலன் கிடைக்கும். சமூகத்தில் மதிப்பு உயரும்.

# மீண்டும் சட்டமன்ற மேலவை; பட்ஜெட் தொடரில் தீர்மானம்!

சென்னை, ஓக. 06

தமிழகத்தில் மீண்டும் சட்டமன்ற மேலவை உருவாகிறது. இதற்கான தீர்மானம் வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் நிறைவேற்றப்படுகிறது.

தமிழகத்தில் சட்டமன்ற பேரவை இருப்பது போல் சட்டமன்ற மேலவை கடந்த 1989ஆம் ஆண்டு வரை செயல்பட்டு வந்தது. அதன் பின்னர் மேலவையை 2010ஆம் ஆண்டு மீண்டும் கொண்டு வருவதற்கு அப்போதிருந்த முதலமைச்சர் மு.கருணாநிதி முயற்சிகள் மேற்கொண்டார். அதற்கான சிறப்பு அதிகாரியும் நியமிக்கப்பட்டார். ஆனால், அப்போது அந்த முயற்சி கைகூடவில்லை.



தற்போது கருணாநிதியின் முயற்சியை நிறைவேற்றும் வண்ணம், மீண்டும் சட்டமன்ற மேலவையை கொண்டு வருவதற்கான முயற்சிகளை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மேற்கொண்டுள்ளார். இதற்காக ஏற்கனவே ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன. நேற்று நடந்த அமைச்சரவைக் கூட்டத்திலும் இதுகுறித்து ஆலோசிக்கப்பட்டது.

சட்டமன்ற மேலவையை மீண்டும் தமிழகத்தில் கொண்டு வருவதற்கான தீர்மானத்தை, 13 ஆம் திகதி கூட இருக்கும் சட்டமன்றகூட்டத்தொடரில்கொண்டு வருவதற்கு தமிழக அரசு முடிவு செய்துள்ளது. இந்த தீர்மானத்தை தோழமை கட்சிகளை தவிர மற்ற கட்சிகள் ஏற்குமா? என்பது கேள்விக்குறிதான். என்றாலும், அதிக பலம் பெற்றிருப்பதால் குரல் வாக்கெடுப்பின் மூலம் தீர்மானத்தை தி.மு.க. அரசு நிறைவேற்றிவிடும்.

அதன் பின்னர் நாடாளுமன்ற மக்களவை மற்றும் மாநிலங்களவை ஆகிய 2 அவைகளிலும் இந்த தீர்மானம் அங்கீகரிக்கப்பட வேண்டும். அதன் பின்னர் அதற்கான ஒப்புதலை ஜனாதிபதி வழங்க வேண்டும். சட்டமன்ற மேலவை உறுப்பினர் எம்.எல்.சி. என்று அழைக்கப்படுவார். இவர்களுக்கும் எம்.எல்.ஏ.க்கள் போன்று சம்பளம், ஓய்வூதியம் போன்ற சலுகைகள் உண்டு.

# உள்ளாட்சி தேர்தலை சந்திக்க புது வியூகம் வகுக்கும் பா.ஜ.க.

சென்னை, ஓக. 06

தமிழகத்தில் உள்ளாட்சி தேர்தலை சந்திக்க முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தலைமையில் 17 பேர் கொண்ட குழுவை பாரதிய ஜனதா கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை அறிவித்துள்ளார்.

தமிழகத்தில், 9 மாவட்டங்களில் உள்ளாட்சி தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இந்த தேர்தலை சந்திப்பதற்காக ஒவ்வொரு கட்சியும் முன்னேற்பாடுகள் செய்து வருகின்றன. அதன்படி தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தேர்தலை சந்திக்க 17 பேர் கொண்ட தனிக்குழுவை அறிவித்துள்ளார்.

முன்னாள் மத்திய அமைச்சர் பொன்.இராதாகிருஷ்ணன் தலைமையிலான அந்த குழுவில், மகளிரணி தேசிய தலைவர் வானதி சீனிவாசன், சட்டப்பேரவை பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், துணைத்தலைவர்கள் வி.பி.துரைசாமி, எம்.என்.ராஜா, பொதுச் செயலாளர்கள் ராகவன், செல்வகுமார், ராம ஸ்ரீனிவாசன், நாகராஜன், மாநிலச் செயலாளர் கார்த்தியாயினி, பொதுக்குழு உறுப்பினர்கள் காந்தி, சரஸ்வதி, சசிகலா புஷ்பா, செய்தி தொடர்பாளர் நரசிம்மன், சிறப்பு அழைப்பாளர்கள் ராமலிங்கம், கு.க.செல்வம், சம்பத் உள்ளிட்டோர் குழுவின் உறுப்பினர்களாக அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அமைச்சர் கே.என்.நேரு, செப்டம்பர் 15ஆம் திகதிக்குள் ஊரக உள்ளாட்சி தேர்தல் நடத்தப்படும். இந்த ஆண்டு இறுதிக்குள் நகர்புற உள்ளாட்சி தேர்தல் நடைபெறும் என்று தெரிவித்தார். இதனால், அரசியல் கட்சிகள் உள்ளாட்சித் தேர்தலை எதிர்கொள்ள தயாராகி வருகின்றன. அந்த வகையில், பா.ஜா.க. புது வியூகம் வகுத்து செயல்பட்டு வருகின்றது.

# மேகதாது அணைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழக பா.ஜ.க. உண்ணாவிரத போராட்டம்



சென்னை, ஓக. 06

மேகதாது பகுதியில் அணை கட்டும் கர்நாடக அரசைக் கண்டித்து தஞ்சையில் தமிழ்நாடு பா.ஜ.க. தலைவர் அண்ணாமலை தலைமையில் 500க்கும் மேற்பட்டோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மேகதாதுவில் அணைக்கட்ட முயற்சிக்கும் கர்நாடக அரசின் முயற்சியை கைவிடக் கோரி தமிழக பா.ஜ.க. சார்பில் தஞ்சை பனகல் கட்டிடம் அருகே நேற்று காலை 9.00 மணி முதல் மாலை 5 மணி வரை உண்ணாவிரத அறப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப்போராட்டத்துக்கு தமிழக பா.ஜ.க. தலைவர் கே. அண்ணாமலை தலைமை தாங்கினார். இந்தப் போராட்டத்தை அக்கட்சியின் தமிழக இணைப்பு பொறுப்பாளர் சுதாகர் ரெட்டி தொடங்கி வைத்தார்.

தமிழக பா.ஜ.க. இணை பொறுப்பாளர் பி.சுதாகர் ரெட்டி, மூத்த தலைவர் இல.கணேசன், முன்னாள் மத்திய மந்திரி பொன். ராதாகிருஷ்ணன், சி.பி.ராதாகிருஷ்ணன், எச்.ராஜா, சட்டமன்ற பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன், பா.ஜ.க. தேசிய மகளிர் அணி தலைவர் வானதி சீனிவாசன் உள்பட தலைவர்கள் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

ஈழநாடு






# கிளிநொச்சியில் இரண்டாவது தடுப்பூசி செலுத்த சென்ற முதியவர்கள் ஏமாற்றம்

கிளிநொச்சி, ஓக. 06

கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு நேற்று இரண்டாவது தடுப்பூசி செலுத்துவதற்கு சென்ற 60 வயதுக்கு மேற்பட்ட நூற்றுக்கணக்கான முதியவர்கள் திரும்பிச் சென்றுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

ஜூலை மாதம் 06 திகதியும் அதனை அண்டிய சில நாள்களும் கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு முதலாவது சினோபார்ம் தடுப்பூசி செலுத்தப்பட்டது. இதன்போது இரண்டாவது தடுப்பூசிக்கு நேற்று திகதி குறிக்கப்பட்டது.

எனவே 60 வயதுக்கு மேற்பட்ட முதலாவது தடுப்பூசியை பெற்றுக்கொண்ட முதியவர்கள் நேற்று இரண்டாவது தடுப்பூசியை பெற்றுக்கொள்ள கிளிநொச்சி மத்திய கல்லூரிக்கு காலை ஆறு மணி முதல் சென்றனர். காலை ஒன்பது மணி வரை இவ்வாறு நூற்றுக்கணக்கான முதியவர்கள் மத்திய கல்லூரி மண்டபத்தில் நின்றபோதும் தடுப்பூசி செலுத்துவதற்கான எவ்வித ஏற்பாடுகளும் இடம்பெறவில்லை.

இது தொடர்பில் அறிந்த இராணுவத்தினர் சம்பவ இடத்துக்குச் சென்று 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இரண்டாவது தடுப்பூசி வரும் 7ஆம் திகதிக்கு பின்னர் கிடைக்கக் கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாகவும், எனவே இது தொடர்பான அறிவித்தல் சுகாதாரத்துறையினரால் அறிவிக்கப்படும் என்றும் அதன் பின்னர் சமூகம் தருமாறும் தெரிவித்து, மக்களை திருப்பி அனுப்பினர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பிராந்திய சுகாதார பிரிவு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு வினவியபோது, இச்சம்பவம் தொடர்பில் தங்களுக்கு எதுவும் தெரியாது என்றும், முதலாவது தடுப்பூசியை 60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு இராணுவத்தினரே செலுத்தி னார்கள். எனவே அவர்களே இவர்களுக்கான பதிலளிக்க வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தால் வயோதிப நிலையிலும் தூர இடங்களிலிருந்து வந்த மக்கள் கடும் சிரமங்களுக்கு மத்தியில் திரும்பிச் சென்றனர்.

தங்களுக்கு முறையான அறிவித்தல்களை வழங்கியிருந்தால் கொரோனா பரவல் நெருக்கடி மத்தியிலும் வீண் அலைச்சல் இருந்திருக்காது என அவர்கள் தெரிவித்தனர்.

# 45 ஆயிரம் சிறுவர்களுக்கு இலங்கையில் கொரோனா

## சுகாதார அமைச்சர் தெரிவிப்பு



கொழும்பு, ஓக. 06

**இலங்கையில் இதுவரையில் 45,831 சிறுவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ எழுப்பிய கேள்விக்கு நேற்று பதிலளிக்கும்போதே சுகாதார அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அதன்படி, இதுவரை 10 வயதுக்கு குறைந்த 19,688 சிறார்களுக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுப்பதோடு, 10 தொடக்கம் 18 வரையான சிறுவர்களில் 26,143 பேர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளதாகவும் அவர் இதன்போது குறிப்பிட்டார்.

18 வயதுக்கும் கீழ்ப்பட்ட 14 சிறுவர்கள் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளதாகவும் சுகாதார அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

அதேபோல, கடந்த 10 நாள்களாக கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்ட 9,000 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

# 11 தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்ட விவகாரம்; கரன்னகொட குறித்து மன்னிப்பு சபை கேள்வி

கொழும்பு, ஓக. 06

தமிழ் இளைஞர்கள் கடத்தப்பட்டு, காணாமலாக்கப்பட்டனரென கூறப்படும் வழக்கில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் முடிவு குறித்து தெளிவுபடுத்தவேண்டும் என சர்வதேச மன்னிப்புச் சபை கோரியுள்ளது.

2008 மற்றும் 2009ஆம் ஆண்டுகளில் 11 இளைஞர்கள் கடத்தப்பட்ட வழக்கில் முன்னாள் கடற்படைத் தளபதி வசந்த கரன்னகொட மீது குற்றச்சாட்டுகளை தொடர முடியாது என சட்டமா அதிபர் திணைக்களம் நேற்றுமுன்தினம் அறிவித்தது.

இந்த நிலையில், இந்த விடயம் குறித்து கருத்து வெளியிடுகையிலேயே சர்வதேச மன்னிப்புச் சபையின் ஆசிய - பசுபிக் பிராந்திய பணிப்பாளர் யாமினி மிஸ்ரா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர், பல தசாப்தங்களாக பல்லாயிரக்கணக்கான மக்கள் வலுக்கட்டாயமாக காணாமல்போன நிலையில், கட்டாயமாக காணாமலாக்கப்பட்டவர்கள் பட்டியலில் உலகளாவிய ரீதியில் இரண்டாவது இடத்தில் இலங்கை உள்ளது.

இந்த நிலையில், இந்த வழக்கு ஏற்கனவே இலங்கை நீதிமன்றங்களில் விதிக்கப்பட்ட தடைகளால் தடைப்பட்டுள்ளது. நேற்றைய முடிவு பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு நீதி வழங்குவதில் மேலும் தாமதத்தை ஏற்படுத்துகிறது.

இந்த நிலையில், சட்டமா அதிபர் திணைக்களம் அதன் முடிவுக்கான காரணங்களை விளக்க வேண்டும்.

மேலும் இலங்கை அதிகாரிகள் காணாமல் ஆக்கப்பட்டவர் மற்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கும் உண்மை, நீதி மற்றும் இழப்பீடுகளை வழங்க வேண்டும் - என்றார்.

# அடையாள அட்டை இல்லாதோர் தடுப்பூசியை பெறுவதில் சிக்கல்?

கொழும்பு, ஓக. 06

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் தடுப்பூசிகளைப் பெறுவதில் சிக்கல்களை எதிர் கொண்டுள்ளனர்.

இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் லக்ஷ்மன் கிரியெல்ல சுகாதார அமைச்சரிடம் கேள்வி யெழுப்பினார்.

தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதற்கு தேசிய அடையாள அட்டையை சமர்ப்பிக்க வேண்டும் என்ற நடைமுறை இருக்கின்றது. வாக்காளர் புத்தகத்தில் அவர்களின் பெயர் இருந்தாலும் அவர்களுக்கு தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும். இல்லையெனில், குறித்த நபர் வசிக்கும் பிரதேசத்தில் கிராம உத்தியோகத்தர் அல்லது அரசாங்க அதிகாரி ஒருவரிடம் வதிவை உறுதிப்படுத்திக்கொண்டால், அதன் மூலம் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மலையகத்தில் அதிகமா னோர் தேசிய அடையாள அட்டை இல்லாத நிலையில், தடுப்பூசியைப் பெற்றுக்கொள் வதில் பெரும் அசௌகரியங் களை எதிர்கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்பு!

கிளிநொச்சி, ஓக. 06



கிளிநொச்சி மாவட்டம் விளாவோடை வயல் பகுதியில் இருந்து இராணுவ சீருடையுடன் மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த வயல் காணியை சீரமைத்த காணி உரிமையாளர் எச்சங்கள் அவதானிக்கப்பட்டதை அடுத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளார். குறித்த எச்சங்களை கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி பார்வையிட்ட பின்னர் அகற்ற நடவடிக்கை எடுக்கப் படும் என்று தெரிவித்துள்ள கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ரிஷாத் குற்றப்பத்திரிகை இல்லாமல் 102 நாள்கள் தடுப்பிலிருப்பது முழு பாராளுமன்றுக்கே சவால்

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஓக. 06

ரிஷாத் பதியுதீனை குற்றப்பத்திரிகை இல்லாமல் 102 நாட்கள் தொடர்ச்சியாக தடுத்து வைத்திருப்பது தவறு. இது முழு பாராளுமன்றத்துக்கே விடுக்கப்படும் சவாலாகும். அரசியல் காரணமாகவே அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என நான் நம்புகிறேன். சட்டம் ஒழுங்கு பொலிஸ் துறை அமைச்சர் சரத் வீரசேகர இதற்கு பதிலளிக்க வேண்டும் என தமிழ் முற்போக்குக் கூட் டணி தலைவர் மனோ கணேசன் நேற்று பாராளுமன்றத்தில் கூறினார்.

சட்டம் ஒழுங்கு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவை விளித்து பேசிய மனோ கணேசன் எம்.பி மேலும் கூறிய தாவது:

இன்று (நேற்று) காலையிலேயே நானும், ரணில் விக்கிரமசிங்க எம்.பியும் இதுபற்றி பேச எண்ணினோம். ஆனால், சபா நாயகர் நேரம் ஒதுக்கவில்லை. ஆகவே இப்போது பேசுகிறேன்.

இது இன்று ரிஷாத் பதியுதீனுக்கு நடக்கிறது. நாளை எனக்கு நடக்கும். எதிர்காலத்தில் நாம் ஆட்சிக்கு வரும்போது, உங்களுக்கும் நடக்கும். ஆகவே இது ஒரு பிழையான முன்னுதாரணம். இதை உடன் நிறுத்துங்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் நீங்கள் சூத்திரதாரியை கைது செய்துவிட்டதாக இந்த சபையில் அறிவித்தீர்கள். இன்னும் பலரையும் கைது செய்து உள்ளீர்கள். அவர்கள் மீதும் குற்றப்பத்திரிக்கை தயார் செய்கிறீர்கள். அதை சட்டப்படி செய்யுங்கள். ஆனால் ரிஷாத் பதியுதீனை குற்றப்பத்திரிகை இல்லாமல் சும்மா அடைத்து வைத்து உள்ளீர்கள்.

இது அரசியல். உங்கள் அரசியல் தேவைக்காக அவரை அடைத்து வைத்துள்ளீர்கள்.

ஒன்றில் அவரை உடன் விடுவியுங்கள் அல்லது அவர் பற்றிய குற்றப்பத்திரிகையை முன்னிலைப்படுத்துங்கள்.

இது தொடர்பாக இன்று எதிரணி கட்சித் தலைவர்கள் எதிர் கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் சபாநாயகர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்தனவை சந்தித்து எமது ஆட்சேபனையை தெரிவித்தோம். இந்த சந்திப்பில் சஜித் பிரேமதாஸ, மனோ கணேசன், சுமந்திரன், ரவுப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், லக்ஸ்மன் கிரியெல்ல, ரஞ்சித் மத்துமபண்டார, திஸ்ஸ அத்தநாயாக்க ஆகியோர் கலந்துகொண்டோம்.

எமது ஆட்சேபனையை அடுத்து சபாநாயகர் , சம்பந்தப்பட்ட பாதுகாப்புத் துறையினருடன் தொடர்பு கொண்டு பதிலை பெற்று சபைக்கு அறிவிப்பதாக எமக்கு உறுதி அளித்தார்.



# கொரோனா செயலணியை கலையுங்கள்!

## ரணில் அவசர கோரிக்கை

கொழும்பு, ஒக. 06

நாட் டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் அதிகரித்துவரும் நிலையில், தற்போது நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதாக பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்ரமசிங்க சபையில் தெரிவித்துள்ளார்.

மேலும், தற்போது உருவாக்கப்பட்டுள்ள கோவிட் செயலணியை கலைத்துவிட்டு, அமைச்சரவை ஊடாக விசேட குழுவொன்றை நியமித்து கொரோனா விடயங்களை அரசாங்கம் கையாள வேண்டுமெனவும், இல்லையெனில் பல உயிர்கள் செத்து மடிவதை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தற்போது வைத்தியசாலைகளில் கொரோனா நோயாளர் விடுதிகளில் இட நெருக்கடி ஏற்பட்டுள்ளதாகவும் அறிய முடிகிறது.

எனவே, இராணுவம் மற்றும் இராணுவ பொறியியல் பிரிவினரின் உதவியுடன் தற்போது உள்ள வைத்தியசாலைகளுக்கு அருகிலேயே புதிய வைத்தியசாலைகளையோ அல்லது வைத்தியசாலை கட்டட வசதிகளையோ அதிகரிக்குமாறும் ரணில் விக்கிரமசிங்க சபையில் குறிப்பிட்டார்.

சுனாமி காலத்திலும் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்பை ஓரிரு வாரங்களில் அரசாங்கம் சிறப்பாக கையாண்டு மக்களுக்கு நிவாரணமும் வழங்கியிருந்தது. அதேபோன்று கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தவும் புதிதாக நிதி ஒதுக்கீடு செய்தேனும் பிரச்னையை தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் தெரிவித்தார்.

நாங்கள் கோவிட் பிரச்னையை அரசியலாக்கவில்லை. ஆனால் இப்போது இதை அரசியல் ரீதியாகவே தீர்க்க வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## தொற்றுக்குள்ளான நீதிமன்ற பதிவாளர் உயிரிழந்தார்

கொழும்பு, ஒக. 06

கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில், சிகிச்சை பெற்று வந்த, ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்தின் பதிவாளர் உயிரிழந்தார் என, ஹற்றன்-டிக்கோயா நகர சபையின் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன் தினம் மாலை இவர் உயிரிழந்தாரென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, குறித்த பதிவாளருடன் நெருங்கிப் பழகிய அனைவருக்கும் அன்ரிஜென் பரிசோதனை செய்யப்பட்ட நிலையில், எவருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ஹற்றன் நீதிவான் நீதிமன்றத்துக்கு வருகைத் தருபவர்களுக்கு எழுமாறான அன்ரிஜென் பரிசோதனை செய்யப்படவுள்ளதென்றும் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

## சமையல் எரிவாயு தட்டுப்பாடு!

கொழும்பு, ஒக. 06

நாடு முழுவதும் சமையல் எரிவாயு தட்டுப்பாடு நிலவுகின்றமையால் மாற்று வழிகள் இன்றி நுகர்வோர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

நாட்டில் நிலவும் டொலர் பற்றாக்குறை காரணமாக லாஃப் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளமையை அடுத்து இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேச சந்தையில் எரிவாயுவின் விலை அதிகரித்தமையை அடுத்து இலங்கையிலும் எரிவாயுவின் விலையை அதிகரிக்குமாறு எரிவாயு நிறுவனங்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்திருந்தன.

எவ்வாறிருப்பினும் எரிவாயு விலையை அதிகரிப்பதற்கு அரசாங்கத்தினால் அனுமதி வழங்கப்படவில்லை.

மேலும் டொலர் பற்றாக்குறை நிலவுகின்ற நிலையில் கடன் உறுதி கடிதத்தை திறப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளமையினால், லாஃப் எரிவாயு நிறுவனம் இறக்குமதி செய்வதில் பிரச்சனையை எதிர்நோக்கியுள்ளதாக அறிவித்திருந்தது.

இதனையடுத்து, லாஃப் நிறுவனம் எரிவாயு இறக்குமதியை நிறுத்துவதற்கு தீர்மானித்தால், அதற்கான கேள்வியை நிரப்புவதற்கு லிட்ரோ நிறுவனத்துக்கு முடியும் என லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் அரசாங்க தகவல் திணைக்களத்தின் ஊடாக கடந்த ஜூலை 20ஆம் திகதி அறிவித்திருந்தார்.

எனினும், லாஃப் எரிவாயுக்கு பதிலாக லிட்ரோ எரிவாயு கொள்கலனை விநியோகிக்குமாறு நிறுவனத்திடமிருந்து தமக்கு அறிவிக்கப்படவில்லையென லிட்ரோ விநியோக முகவர்கள் தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

## கூடுதல் விலைக்கு பொருள்களை விற்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை

கொழும்பு, ஒக. 06

உத்தரவாத விலையை விட கூடுதலான விலைக்கு பொருட்களை விற்பனை செய்வோருக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

நெல்லின் விலை, அரிசியின் விலை மற்றும் வாழ்க்கைச் செலவை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் நடைமுறைப் படுத்தும் செயல்திட்டங்களை தெளிவுபடுத்துவதற்காக



அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடக கலந்துரையாடலின்போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

நெல் சந்தைப்படுத்தல் சபை, நெல் ஆலை உரிமையாளர்கள் ஆகியோருக்குப் புறம்பாக நெல்லை சேமித்து வைக்கும் மூன்றாம் தரப்புக்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு மேலதிகமாக தேவையான சட்டங்களும் வகுக்கப்பட்டுள்ளன. விலை அதிகரிப்பை கருத்திற்கொண்டு பதுக்கி வைக்கப்படும் நெல்லை அரசுடைமையாக்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கான சட்டமும் தயாரிக்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார்.

வாடிக்கையாளர்கள், விவசாயிகள் ஆகிய தரப்புக்களின் நலன்கருதி இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் பந்துல குணவர்தன சுட்டிக் காட்டினார்.

உத்தரவாத விலையை விட கூடுதலான விலைக்கு அரசியை விற்பனை செய்வோருக்கு எதிராக விதிக்கப்படும் தண்டப்பணம் 25 ஆயிரம் ரூபா தொடக்கம் ஒரு லட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். (அ)

## அத்துமீறி மீன்பிடித்தமைக்காக இலங்கை கப்பலின் கப்டனுக்கு பயங்கர தண்டனை விதித்தது சீஷெல்ஸ்!

சீஷெல்ஸ் கடற்பரப்பில் அத்துமீறி நுழைந்து மீன்பிடி யில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைப்பற்றப்பட்ட இலங்கைக் கொடியுடனான கப்பலின் கப்டனுக்கு 167,000 அமெரிக்க டொலர் அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.

சீஷெல்ஸ் உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் புதன் கிழமை இந்த தீர்ப்பை அளித்தது.

மகாலிங்கம் கணபதி (வயது-32) என்பவரே தண்டிக்கப்பட்டுள்ளார். அவர் குற்றத்தை ஒப்புக் கொண்டார். சீஷெல்ஸ் மீன்வள சட்டத்தின் கீழ் அவர் தண்டிக்கப்பட்டார்.

இவர், ஜூன் முதலாம் திகதி, சம்பத் 7 என்ற மீன்பிடி படகு டன் கைதானார். சீஷெல்ஸ் கடலில் மீன்பிடிக்க உரிமம் இல்லாமல் மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் அவர் கைதுசெய்யப்பட்டார்.

தலைமை நீதிபதி, ரோனி கோவிந்தன், மீன்பிடி கப்பல் உரிமம் இல்லாமல் மீன்பிடித்தல் குற்றங்களைச் செய்ததற் காக 167,000 அமெரிக்க டொலர் (33383233.20 இலங்கை ரூபாய்) அபராதம் விதித்தார். 4 நாள்களுக்குள் இந்த அபராதத்தை செலுத்த தவறினால், குற்றம் சாட்டப்பட்டவர் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை அனுபவிக்கவேண்டும்.

மீன்பிடிச் சட்டத்தின் பிரிவு 70 இன் படி, குற்றச் செயலுக்குப் பயன்படுத்தப்படும் கப்பலில் காணப்பட்ட எந்தப் பகுதியும் சீஷெல்ஸ் குடியரசுக்கு உடைமையாக்கப்படும் என நீதிபதி உத்தரவிட்டார். இதனையடுத்து, கப்பல் பறிமுதல் செய்யப்பட்டது. அபராதம் செலுத்தப்படு வதை உறுதி செய்வதற்காக ஒகஸ்ட் 18 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு அழைக்கப்படும். அதுவரை குற்றவாளி நாட்டை விட்டு வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது.

## ஒரு இலட்சத்து 97 ஆயிரத்துக்கும் மேற்பட்டோருக்கு புதன் தடுப்பூசி

கொழும்பு, ஒக. 06

இலங்கையில் நேற்று முன் தினம் மாத்திரம் ஒரு இலட்சத்து 97 ஆயிரத்து 349 பேருக்கு கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன.

அதன்படி, 97 ஆயிரத்து 966 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரை, 85 இலட்சத்து 27 ஆயிரத்து 195 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், நேற்று முன் தினம் 11 ஆயிரத்து 58 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நாட்டில் இதுவரையில், 18 இலட்சத்து 23 ஆயிரத்து 802 பேருக்கு சினோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் செலுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், நேற்றுமுன் தினம் 50 ஆயிரத்து 893 பேருக்கு அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸும் 30 ஆயிரத்து 499 பேருக்கு அஸ்ட்ராசெனெகா தடுப்பூசியின் முதலாவது டோஸும் செலுத்தப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் ஆயிரத்து 308 பேருக்கு பைஸர் முதலாம் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது.

(அ)

## தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய மேலும் 123 பேர் கைது!

கொழும்பு, ஒக. 06


நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 123 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரை கைதுசெய்யப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 266ஆக உயர்வடைந்துள்ளது எனப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: -

இவர்களில் 50 ஆயிரம் பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும் 3 ஆயிரம் பேருக்கு எதிராக எதிர்வரும் நாட்களில் வழக்குத் தாக்கல் செய்யப் படவுள்ளது.

அதேபோன்று மேல் மாகாணத்திலிருந்து வெளியேறும் உட்பிரவேசிக்கும் இடங்களில் நேற்றுமுன்தினம் 4 ஆயிரத்து 589 பேர் சோதனைக்கு உட்




படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்களில் 96 பேர் பயணக் கட்டுப்பாடுகளை மீறும் வகையில் பயணித்துள்ள நிலையில் அவர்கள் பயணித்த 53 வாகனங்களில் திருப்பி அனுப்பப் பட்டுள்ளனர்.

மாகாணங்களுக்கு இடையிலான பயணக்கட்டுப்பாடு தொடர்ந்து நடைமுறைப்படுத்தப்படும். மாகாணங்களைக் கடந்து பயணிப்பதற்கு மக்களுக்கு அனுமதிக்கப்போவதில்லை.

நெருங்கிய உறவினர்களின் மரணவீடு, வைத்திய சிகிச்சை அல்லது ஏதேனும் அவசர நிலைமையெனில் மாகாணங்களைக் கடந்து பயணிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்" - என்றார். (இ)

# இந்தியா, சிங்கப்பூரிலிருந்து ஒட்சிசன் சிலிண்டர் இறக்குமதி

கொழும்பு, ஓக. 06

நாட்டில் உற்பத்தி செய்யப்படும் ஒட்சிசனில் பாதியளவு கொரோனா நோயாளர்களுக்கு பயன்படுத்தும் நிலை ஏற்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய கொரோனா நிலைமை தொடர்பில் பாராளுமன்றில் விளக்கமளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அத்துடன், இந்தியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்தும் ஒட்சிசன் சிலிண்டர்களை இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசித்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது குறிப்பிட்டார்.

மேலும், தற்போது அதிபர்,ஆசிரியர் சங்கங்களினால் முன்னெடுக்கப்பட்டுவரும் ஆர்ப்பாட்ட நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதன் ஊடாக கொரோனா வைரஸ் நிலைமை மேலும் தீவிரமடையும் ஆபத்து இருப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

ஆசிரியர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்களுக்கு முறையான தீர்வை அரசாங்கம் நிச்சயமாக பெற்றுக்கொடுக்கும் என குறிப்பிட்ட அவர், ஆசிரியர்கள் போராட்டம் நடத்துவதற்கு இது சரியான தருணம் அல்ல வெனவும் குறிப்பிட்டார்.

அரச அதிகாரிகள் அனைவரும் கடந்த 2ஆம் திகதி முதல் பணிக்கு அழைக்கப்பட்டிருந்தாலும், நாட்டின் கோவிட் நிலைமையை கருத்தில்கொண்டு கர்ப்பவதி தாய்மார்களை மறு அறிவிப்பு வரையில் பணிக்கு அழைக்காமல் இருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண பாராளுமன்றில் தெரிவித்தார்.

# சிறுவர் மீதான துர்நடத்தை வழக்குகள் மேல்நீதிமன்றில் பிரத்தியேக தினத்தில்

கொழும்பு, ஓக. 06

சிறுவர் மீதான துர்நடத்தை வழக்குகளை மேல் நீதிமன்றில் விசாரிக்க குறிப்பிட்ட திகதியை ஒதுக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் முடித விதானபத்திரண, நீதிச் சேவை ஆணைக்குழுவுடன் நடத்திய கலந்துரையாடலைத் தொடர்ந்து இந்த முடிவு எடுக்கப்பட்டது.

கூடுதலாக, பாதிக்கப்பட்ட சிறுவர்களை நீதிமன்றத்திற்கு அழைப்பதற்கு பதிலாக தொலைதூர இடங்களிலிருந்து சான்றுகளை வழங்க ஒன்பது மாகாணத்திலும் ஒலிப்பதிவு நிலையங்களை அமைக்க அமைச்சரவை ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

சிறுவர்கள் மீதான துர்நடத்தை, வன்புணர்வு மற்றும் சித்திரவதை உள்ளிட்ட சிறுவர்களுக்கு தீங்கு விளைவிக்கும் செயல்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களை வலுப்படுத்தவும் புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும் விவாதம் பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

கோவிட் -19 தொற்றுநோய்களின் போது தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகார சபை பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கை 55 ஆயிரம் என்றும், கடந்த 6 மாதங்களில் 4 ஆயிரத்து 740 சிறுவர்கள் மீதான துர்நடத்தைகள்இடம்பெற்றுள்ளன என்று தெரியவந்தது.

சிறுவர் மீதான துர்நடத்தை சம்பவங்களை அறிக்கையிடுவதற்கு ஒரு குறிப்பிட்ட தணிக்கை தேவை என்று இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல கூறினார்.

தற்போது சிறுவர்கள் மீதான துர்நடத்தையை விசாரணை செய்யும் முறை சிறுவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு தீங்கு விளைவிக்கும் என்று அவர் கூறினார்.

18 வயதுக்குட்பட்ட சிறுவர்களை தொழிலாளர்களாக பயன்படுத்துவதற்கு எதிராக சட்டத்தை கடுமையாக நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் விவாதிக்கப்பட்டு வருகிறது.

# அரச உத்தியோகத்தர்களை வேலைக்கு அழைப்பது குறித்து புதிய சுற்றறிக்கை

கொழும்பு, ஓக. 06

அரச உத்தியோகத்தர்களை வேலைக்கு அழைப்பது தொடர்பாக புதிய சுற்றறிக்கை ஒன்று பொது நிர்வாக அமைச்சின் செயலாளரினால் வெளியிடப்படவுள்ளது.

குறிப்பாக கர்ப்பவதி தாய்மார்களுக்கு வீட்டிலிருந்து பணியாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவது தொடர்பான சுற்றறிக்கை வெளியிடப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித் துள்ளார்.

மேலும், அரச நிறுவனங்களின் பிரதானிகளினது தீர்மானத்துக்கமைய, வாரத்துக்கு ஒரு குழுவினர் என்ற அடிப்படையில் இரு குழுக்களாக பிரித்து பணியாளர்களை கடமைக்கு அழைப்பது தொடர்பான விடயமும் குறித்த சுற்றறிக்கையில் உள்ளடக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

# கட்டுப்பாடு விதிக்காவிடின் டெல்டா தீவிரமாக பரவும்!

## இலங்கை மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஓக.06

**பயணக் கட்டுப்பாடுகளை விதிக்க தவறினால், டெல்டா திரிபு வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது கடினமாகிவிடும் என, இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் வைத்தியர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.**

கொரோனா வைரஸின் டெல்டா திரிபு இன்று இலங்கையில் பரவத் தொடங்கியுள்ளது. கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறையில் டெல்டா வைரஸ் வேகமாக பரவி வருவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த சூழ்நிலையில் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படாவிட்டால் ஒரு நாடாக டெல்டா வைரஸ் பரவலை கட்டுப்படுத்துவது மிகவும் கடினமாக மாறிவிடும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது குறித்து கருத்து தெரிவித்த பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஹேமந்த ஹேரத், தற்போதைய நிலைமையை மீளாய்வு செய்து,அதை சமநிலைப்படுத்த முடியாவிட்டால் முடிவொன்றை எடுக்கவேண்டியிருக்கும் என தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கொரோனா தொற்றாளர்கள் நடைபாதையில் படுத்து உறக்கம்

## வைத்தியசாலைகளில் பெரும் இடநெருக்கடி

கொழும்பு, ஓக 06

கொள்ளளவை விடவும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை கிடுகிடுவென அதிகரித்துள்ளமையால், கொரோனா தொற்றாளர்கள் வைத்தியசாலைகள் பலவற்றில், நடைபாதைகளில் பாய்களைப் போட்டு, படுத்து துங்கிக்கொண்டிருகின்றனர்.

இது தொடர்பான காணொலி காட்சிகளும், புகைப்படங்களும் சமூக வலைத்தளங்களில் வைரலாகியுள்ளன.

இது, பேராபத்தை ஏற்படுத்தும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அத்துடன், வைத்தியசாலைகள் பலவற்றில் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தொற்றாளர்களை சேர்க்கும் விடுதிகள் மட்டுமன்றி, அவசர சிகிச்சைப் பிரிவு விடுதி கட்டில்களும் கொரோனா தொற்றாளர்களால் நிரம்பியுள்ளன என்றும், அவசர நிலைமை பிரகடனப்படுத்தியிருக்கும் வைத்தியசாலைகளின் நிர்வாகங்கள் அறிவித்துள்ளன.

ராகமையில் உள்ள கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலையில், கொரோனாத் தொற்றாளர்கள் நடைபாதையில், பாய்களைப் போட்டு படுத்து உறங்குவதையும் அவதானிக்க முடிகின்றது.

நாளாந்தம் அனுமதிக்கப்படும் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்துள்ளமையால் இவ்வாறான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது என அந்த வைத்தியசாலையின் நிர்வாகம் அறிவித்துள்ளது.

இந்நிலையில், இரத்தினபுரி போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சைப் பிரிவுள்ள நான்கு கட்டில்களும் நிரம்பியுள்ளன. போதனா வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகளில் நான்கு கட்டில்கள் மட்டுமே உள்ளன. அந்த நான்கு கட்டில்களும் கொரோனா தொற்றாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. சில வைத்தியசாலைகளில் அந்த நான்கு கட்டில்களும் நிரம்பியுள்ளன.

பதுளை வைத்தியசாலையிலும் அவசர நிலைமை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பிலுள்ள சகல அரச மற்றும் தனியார் வைத்தியசாலைகளில் நோயாளர் எண்ணிக்கை ஆகக்கூடுதலான கொள்ளளவுக்கு அண்மித்துள்ளது.

ஆகையால், கொழும்புக்கு வெளியே கொரோனா மத்திய நிலையங்களாக இருக்கும் மத்திய நிலையங்களின் புகுமுகக்கூடத்தில் வைத்து சிகிச்சையளிக்கப்படுகின்றன. "தற்போது இனங்காணப்பட்டுள்ள கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையைப் போல, இன்னும் நான்கு அல்லது ஐந்து மடங்கு தொற்றாளர்கள் சமூகத்தில் உள்ளனர்" என ரவி குமுதேஷ் தலைமையிலான துணை மருத்துவ நிபுணர்களின் கூட்டு ஆணையம் அறிவித்துள்ளது.

# வெலிக்கடை சிறை காவலர் ஒருவர் கைது

கொழும்பு, ஓக. 06

வெலிக்கடை சிறைச்சாலையினுள் கைப்பேசி மற்றும் பற்றி ஒன்றை எடுத்துச் செல்ல முற்பட்ட சிறைச்சாலை காவலர் ஒருவரை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப்ப டையினரால் முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த நபர் பாதணிக்குள் மறைத்து வைத்திருந்த நிலையில், இவ்வாறு குறித்த பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கைதான சிறைச்சாலை காவலரை மேலதிக விசாரணைகளுக்காக பொரளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# இலங்கை நிறுவனத்திடமிருந்து சீனாவுக்கு கை நழுவிப்போன "ஹெல்மட்" தயாரிப்பு

கொழும்பு, ஓக. 06

இலங்கை இராணுவத்துக்கு அவசியமான தலைக்கவச தயாரிப்புக்கான ஒப்பந்தத்தை அரச நிறுவனத்தின் ஊடாக சீன நிறுவனமொன்றுக்கு வழங்கப்பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 22ஆம் திகதி இது தொடர்பிலான ஏலத்தின்போது அரசவர்த்தக கூட்டுறவு நிறுவனத்திற்கு வழங்குவதற்கு கொள் முதல் குழு தீர்மானித்திருந்தது.குறித்த ஏலமானது அமெரிக்க டொலர்களில் இடம்பெற் றிருந்தது.

நாட்டின் ஒரே அனுபவம் வாய்ந்த தலைக்கவச தயாரிப்பு நிறுவனமாக ஹர்ஷ இன்டர்நேஷனல் (பிரைவேட்) லிமிடெட், ஏலத்தை வழங்குவதில் கடுமையான அநீதிக்கு உள்ளாக்கப்பட்டதாக ஜனாதிபதியிடம் எழுத்துபூர்வமாக அறிவித்துள்ளது. யுத்த காலத்தின் போதும் வடக் கிலுள்ள இராணுவத்தினருக் காக 75 ஆயிரம் தலைக்கவசங்களை தயாரித்து இந்நிறுவனம் வழங்கியிருந்தது.

# ஒரு நாடு; பல சட்டங்கள்!




சி.ஜே.அமரதுங்கா

> சீனாவில் உள்ள ஹொங்கொங் தீவு பிரிட்டனுக்கும் மக்காவ் தீவு போர்த்துக்கல்லுக்கும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சியாளர்களால் குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகை முடிந்ததும் 90 களில் அவை மீண்டும் பெறப்பட்டன. வெவ்வேறு பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளைக் கொண்ட தீவுகள் சீனாவுக்குத் திரும்ப கிடைத்தபோது, சீனாவின் கோஷம் 'ஒரு நாடு; இரண்டு அமைப்புகள்' என்பதாகும்.

ஒரு நாடு; ஒரு சட்டம் என்பது சமீபத்தில் பிரபலமான ஒரு கோஷமாகும். இதன் பொருள் நாட்டை ஒன்றாக பேணவேண்டுமென்றால், அனைவரும் ஒரே சட்டத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்பதாகும். மேலும் குறிப்பாக, இந்த வாதத்தின்படி, வெவ்வேறு இனக்குழுக்கள் மற்றும் மாகாணங்களுக்கு தனித்துவமான சட்டங்கள் இருக்க முடியாது.

இந்த கோஷத்தின் உடனடியான இலக்கு இலங்கையின் முஸ்லிம்கள், குறிப்பாக முஸ்லிம் திருமணச் சட்டமாகும். சில சிங்கள கடும்போக்காளர் குழுக்கள் ஒரு முஸ்லிம் ஆணுக்கு பல பெண்களை சட்டப்பூர்வமாக திருமணம் செய்து கொள்வதற்கான வாய்ப்பை விமர்சித்தன. பெண்கள் திருமணம் செய்து கொள்வதற்கான குறைந்தபட்ச வயதையும் அவர்கள் விமர்சித்தனர்.

இந்த கோஷத்தை உருவாக்கியவர்கள் தற்போதைய அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டுவருவதில் உறுதியாக இருந்த சில சிங்கள கடும்போக்கு குழுக்கள் என்பதுடன், அவர்கள் இந்த கோஷம் உட்பட அவர்களின் நிகழ்ச்சி நிரல்களை முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தனர்.

இருப்பினும், கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழுச் சட்டம் நிறைவேற்றப்படுவது அந்த சித்தாந்தத்திற்கு கடுமையான அடியாகும். இது ஒரு குறிப்பிட்ட சட்டத்தால் நிர்வகிக்கப்படும் நாட்டின் ஒரு பகுதிக்கென இயற்றப்பட்ட ஒரு தனிச் சட்டமாகும். அதன்படி, அது "ஒரு நாடு; ஒரே சட்டம்" என்ற கோஷத்தை முற்றிலும் நிராகரிப்பதாக கருதலாம்.

கொழும்பு துறைமுக நகரத்திற்கு ஒரு தனி சட்டம் இருந்தாலும், அது ஒரு சட்டத்திற்கு, நாட்டின் அடிப்படை சட்டமான அரசியலமைப்புக்கு உட்பட்டது. அங்கு, நாட்டில் ஒரே ஒரு சட்டம் மட்டுமே உள்ளது. அரசியலமைபால் வகுக்கப்பட்டுள்ள வரம்புகளுக்கு உட்பட்டு இந்த அடிப்படை சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் ஏனைய அனைத்து வெவ்வேறு சட்டங்களும் உள்ளன.

சிங்கள கடும்போக்காளர்களால் குறிவைக்கப்பட்ட முஸ்லிம் சட்டங்களைப் பொறுத்த வரை இந்த சட்டங்கள் சில காலம் கடந்தவை என்பதை முஸ்லிம்கள் கூட ஒப்புக்கொள்கிறார்கள். மறுபுறம், அந்த விதிகளில் சில இப்போது சட்ட புத்தகங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டதுடன் அரிதாகவே நடைமுறையில் உள்ளன. இருப்பினும், சில சர்ச்சைக்குரிய சட்டங்கள் அவர்களிடையே இன்னமும் நடைமுறையில் உள்ளன. இது மற்றொரு குழுவையோ அல்லது சமூகத்தையோ புண்படுத்தாவிட்டால் அதை எதிர்க்க வேண்டிய அவசியமில்லை என்பது அவர்களின் நம்பிக்கையாகும்.

சிறுபராய திருமணம் போன்ற பிரச்னைகளைக் கருதும்போது, இந்த நாட்டில் உள்ள அனைத்து சமூகங்களிடையேயும் நிலவும் ஒரு தீவிரமான பிரச்னை இதுவாகும். சமூகவியலாளர்கள், வயதெல்லை தொடர்பாக சட்டம் உருவாக்கப்பட்டிருந்தாலும், அந்த பிரச்சினைகள் குறிப்பாக கிராமப்புற ஏழை மக்களிடையே, எந்த இன அல்லது மத வேறுபாடும் இல்லாமல் இன்னமும் உள்ளன என சுட்டிக்காட்டுகின்றனர். அவை சமூக தீர்வுகள் தேவைப்படும் சமூக பிரச்னைகளாகும். சட்டத்தின் எல்லைக்குள் அவை நிகழாமையால் அவற்றிற்கு ஒரு சட்டம் பொருத்தமற்றதாகும்.

மறுபுறம், பல சர்ச்சைக்குரிய மரபுகள் நவீன சமூகங்களில் இன்னமும் நடைமுறையில் உள்ளன. அவற்றில் சில மதத்துடன் தொடர்புடையவை என்பதால் அவர்கள் கேள்வியெழுப்புவதனை கடினமாக்குகிறது. நாட்டின் பிரதானமான சட்ட முறைமைக்கு வெளியே உள்ள பௌத்த மத ஸ்தாபன சொத்துக் கட்டளைச்சட்டம் இதற்கு ஓர் உதாரணமாகும். இதுபோன்ற மற்றோர் உதாரணம், இளம் குழந்தைகளை புதிய பௌத்த தேரர்களாக நியமிப்பதாகும், இது தர்மத்தைப் புரிந்துகொள்வது அல்லாமல், குழந்தைகள் சார்பாக பெரியவர்கள் எடுக்கும் முடிவாகும். குழந்தைகளிடமிருந்து குழந்தைப் பருவத்தைத் களவாடும் பெரியவர்களின் கூற்றுப்படி, இது நல் வாழ்வை நோக்கிய ஒரு படியாகும். அங்கு, சிறுவர்களின் உரிமைகள் பற்றிய பேச்சு பௌத்த மத எதிர்ப்பு எதிரான கொள்கையாகும்.

இந்த நாட்டில் முஸ்லிம்களுக்கு மட்டுமல்லாது, பிற சமூகங்களுக்கும் விசேட சட்டங்கள் உள்ளன. யாழ்ப்பாண தீபகற்பத்தில் உள்ள தேச வழமைச் சட்டம் அத்தகைய ஒரு சட்டமாகும். நிலத்தை விற்கும்போது அது அப்பகுதி மக்களுக்கு முன்னுரிமை வகிக்கிறது. சில காலத்திற்கு முன்பு, சில கடும்போக்காளர்கள் தேசவழமைச் சட்டத்தையும் எதிர்த்தனர்.

இந்த நாட்டில் நடைமுறையில் உள்ள மற்றொரு தனிப்பட்ட சட்டம் உள்ளூர் கண்டிய மக்களுக்கு கண்டிய திருமண சட்டமாகும். இருப்பினும், பெருமைமிக்க கண்டியர்கள் கூட இப்போது அந்தச் சட்டத்தின்படி திருமணம் செய்து கொள்ள ஆர்வம் காட்டவில்லை. அத்தகைய திருமணங்களில், மணமகனும், மணமகளும் தங்கள் கண்டிய பெருமையை வெளிப்படுத்துவதற்காக அசல் ஆடை உட்பட தம்மை கண்டியர்களாக அலங்கரிக்கின்றனர். இருப்பினும், அந்த திருமணம் சாதாரண திருமண சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுகின்றது. இவ்வாறு தான் சமூக ஏற்றுக்கொள்ளல் மாற்றமடைகின்றது.

இந்த கண்டிய சட்டத்தின் கீழ் இருபதாம் நூற்றாண்டின் இறுதி வரை திருமணங்கள் நடைபெற்றன. பாரம்பரிய ஏற்பாடுகளின் கீழ் ஒன்றாக வாழ்ந்த திருமணமாகாத தம்பதிகளின் திருமணங்களை பதிவு செய்ய அந்த நேரத்தில் இது பயன்படுத்தப்பட்டது. குழந்தைகள் மற்றும் பேரக் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழில் உள்ள பிழைகளை சரிசெய்ய அல்லது சொத்து பிரச்னைகளை தீர்க்க அவர்கள் திருமணம் செய்து கொண்டனர். எழுத்தாளருக்குத் தெரிந்தவரை, இராஜரட்டை பகுதியில் உள்ள அத்தகைய குடும்பங்கள் கண்டிய சட்டத்தின் கீழ் திருமணம் செய்து கொள்ள விரும்பின. எனவே, இவை இந்த சட்டம் இன்னும் பயன்பாட்டில் உள்ள நிகழ்வுகளாக இருக்கலாம்.

ஒரே நாடாக இருப்பதற்கு அனைவருக்கும் ஒரே சட்டம் இருக்க வேண்டியது அவசியமில்லை என்பதை அது காட்டுகிறது. அதாவது ஒரு நாட்டினுள் உள்ள வெவ்வேறு சமூகங்கள் தங்கள் நம்பிக்கைகளைப் பொறுத்து மாறுபட்ட சட்டங்களையும் மரபுகளையும் கொண்டிருக்கலாம்.

இதற்கிடையில், அவை அனைத்தையும் ஒன்றாக இணைக்கும் ஒரு பிரதான விதி இருக்க வேண்டும். அதுவே ஒரு நாட்டின் அரசியலமைப்பாகும்.

உலகெங்கிலும் உள்ள பல நாடுகளின் உதாரணங்களால் இதனை மேலும் விளக்கலாம். 51 மாநிலங்களைக் கொண்ட ஒரு சக்திவாய்ந்த நாடு அமெரிக்கா. அமெரிக்காவிற்கு ஒரு நிறைவேற்று ஜனாதிபதி இருக்கின்றதுடன், அவர் தொகுதி மக்களின் வாக்குகளால் தேர்ந்தெடுக்கப்படுகிறார். அண்மையில் நடந்த ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் அதிபர் டொனால்ட் டிரம்பை ஜோ பைடன் தோற்கடித்தார். எவ்வாறாயினும், தேர்தலைத் தொடர்ந்து, ட்ரம்ப், தேர்தலில் மோசடி செய்யப்பட்டதாகவும், தான் உண்மையில் வெற்றி பெற்றதாகவும் கூறினார். அவர் அதை நீதிமன்றங்களுக்கும் கொண்டு சென்றார். அந்தச் செயல்பாட்டின் போது உலகம் பார்த்த ஒரு விடயம் என்னவென்றால், ஒவ்வொரு மாநிலத்திலும் தேர்தல் சட்டங்கள் வேறுபட்டவை. அவை அனைத்தையும் பிணைக்கும் அடிப்படை சட்டம் அரசியலமைப்பு என்பதாகும்.

ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒவ்வொரு சட்டமன்றம் மற்றும் முதலமைச்சரைக் கொண்டுள்ள இந்தியாவைப் பற்றி குறிப்பிடத் தேவையில்லை என்று நினைக்கிறேன்.

சீனாவில் உள்ள ஹொங்கொங் தீவு பிரிட்டனுக்கும் மக்காவ் தீவு போர்த்துக்கல்லுக்கும் நூறு ஆண்டுகளுக்கு முன்பு ஆட்சியாளர்களால் குத்தகைக்கு விடப்பட்டது. குத்தகை முடிந்ததும் 90களில் அவை மீண்டும் பெறப்பட்டன. வெவ்வேறு பொருளாதார மற்றும் அரசியல் அமைப்புகளைக் கொண்ட தீவுகள் சீனாவுக்குத் திரும்பக் கிடைத்த போது, சீனாவின் கோஷம் "ஒரு நாடு, இரண்டு அமைப்புகள்" என்பதாகும்.

இவை அனைத்தும் "ஒரு நாடு; ஒரே சட்டம்" மூலம் ஒரு நாட்டை ஒன்றிணைக்க முடியாது என்பதைக் காட்டுகிறது. அரசியலமைப்பு என்ற ஒரு முதன்மைச் சட்டத்தின் கீழ் வெவ்வேறு சமூகங்கள் அல்லது மாகாணங்களுக்கு விசேட சட்டங்களைக் கொண்டிருப்பதன் மூலம் மட்டுமே இதனை வெற்றிகரமாக மேற்கொள்ள முடியும். ∎

- Journo.lk



# சேதன பசளை அறிமுகமும் எதிர்கொள்ளும் நெருக்கடிகளும்

நா.யோகேந்திரநாதன்

கடந்த 07.07.2021 அன்று ஹெய்ட்டியின் ஜனாதிபதியான ஜூவனஸ் மொய்ஸ் அவரின் இல்லத்தின் முன் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். ஆரம்பத்தில் இக்கொலை பயங்கரவாத இயக்கம் ஒன்றினால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்பட்டாலும் பின்பு நடத்தப்பட்ட விசாரணைகளின் படி இவரின் படுகொலைக்கும் அமெரிக்க சி.ஐ.ஏக்கும் சம்பந்தம் இருப்பதாகக் கருதப்படுகிறது. இவரின் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இவருடைய கொலையில் அமெரிக்க உளவு நிறுவனம் சம்பந்தப்பட்டிருக்குமானால் அதற்கான காரணம் என்னவென்ற கேள்வி எழத்தான் செய்கிறது.

2010ஆம் ஆண்டில் கெஹய்ட்டியில் ஏற்பட்ட பெரும் பூகம்பம் காரணமாக 3 இலட்சம் மக்கள் உயிரிழந்தனர். 10 இலட்சம் பேர் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகினர். 18 இலட்சம் வீடுகள் அழிவுற்றன. கோப்பி, சோளம் போன்ற பயிர்களின் உற்பத்தியால் செழிப்புற்றிருந்த கெயிற்றி கடும் பஞ்சத்துக்கு முகம் கொடுக்க வேண்டி வந்தது. இந்த நிலையில் 2017ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த அமெரிக்க ஆதரவாளரான மெரிட்றி விதை தானியங்களாகச் சேகரிக்கப்பட்ட சோளத்தை மக்களின் உணவுத் தேவைக்கு விநியோகித்து விட்டு விதை தானியமாக அமெரிக்காவிலிருந்து சோளத்தை இறக்குமதி செய்தார்.

மரபணு மாற்றப்பட்ட இவற்றிலிருந்து விதை தானியங்களைப் பெற முடியாது. அதாவது ஒவ்வொரு வருடமும் விதை சோளங்களை அமெரிக்காவிலிருந்தே இறக்குமதி செய்யவேண்டும். அது மட்டுமின்றி இப்பயிர்களின் மகரந்தப் பரவல் மூலம் உள்ளூர்ச் சோளமும் விதை சோளத்தை உற்பத்தி செய்யும் ஆற்றலை இழந்து விடும். அதாவது கெயிட்டியின் முக்கிய பொருளாதார உற்பத்தியில் ஒன்றான சோள உற்பத்தி முற்றுமுழுதாகவே அமெரிக்க நிறுவனங்களில் தங்கியிருக்கவேண்டிய நிலை எழுந்தது.

அப்போது எதிர்க்கட்சித் தலைவராயிருந்த ஜூனஸ் மொய்ஸ் விவசாயத்தை அமெரிக்க மயப்படுத்தும் திட்டத்திற்கு எதிராக நாடு பரந்த போராட்டங்களை முன்னெடுத்தார். இப்போராட்டங்கள் மெரிட்றியின் ஆட்சிக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கின.

2017ஆம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் பதவிக்கு வந்த ஜூவஸ் யொய்ஸ் அமெரிக்காவின் பொருளாதார விலங்குகளை உடைக்க ஆரம்பித்தார். அதையடுத்து அமெரிக்கா அவரின் ஆட்சிக்குப் பெரும் பொருளாதார நெருக்கடிகளை ஏற்படுத்தியது. எரிபொருள் விலையுயர்வு, விலைவாசி உயர்வு என்பனவற்றுக்கு எதிராக 2018 தொட்டு 2020வரை தொடர் போராட்டங்கள் முடுக்கி விடப்பட்டன. எனினும் அவர் கெயிட்டியின் பொருளாதாரத்தை மீளக் கட்டியமைக்கப் பல இறுக்கமான நடவடிக்கைகளை எடுத்தார். எனினும் அவர் கடந்த ஜூலை 7 ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டு விட்டார்.

இதிலிருந்து ஏகாதிபத்திய சக்திகள் கைத்தொழில் உற்பத்தியை மட்டுமின்றி விவசாய உற்பத்தியையும் உலகளாவிய ரீதியில் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்காக எதையும் செய்யத் தயங்க மாட்டார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

இலங்கையில் இரசாயனப் பசளைகள் அறிமுகப்படுத்தப்பட்டதும், அவை தற்சமயம் எமது விவசாயத்தின் தவிர்க்க முடியாத தேவையாகவும் மாறிவிட்டமையும் இந்த ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் ஒரு வடிவமேயாகும்.

எமது தொன்மையான விவசாய முறைகள் இயற்கையோடு இயைந்தவையாகவே அமைந்திருந்தன. 1950ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் குடியேற்றத்திட்டங்களும், மத்தியதர விவசாய காணிகளிலான உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்ட பின்பே எமது நாட்டில் இரசாயனப் பசளைகள் அறிமுகமாகின. பரப்புக் கணக்கிலான நெல் உற்பத்தி ஏக்கர் கணக்கில் விரிவடைந்தமை இறக்குமதி பசளைகளின் தேவையையும் இயந்திர மயமாக்கத்தையும் உருவாக்கின.

**எமது தொன்மையான விவசாய முறைகள் இயற்கையோடு இயைந்தவையாகவே அமைந்திருந்தன. 1950ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் குடியேற்றத்திட்டங்களும், மத்தியதர விவசாய காணிகளிலான உற்பத்தியும் ஆரம்பிக்கப்பட்ட பின்பே எமது நாட்டில் இரசாயனப் பசளைகள் அறிமுகமாகின.**

எனினும் வடபகுதியில் குடியேற்றத் திட்டங்கள் கூட உடனடியாக இரசாயனப் பசளைகளுக்குள் இறங்கி விடவில்லை. ஒவ்வொரு விவசாயிகளின் காணியிலும் முன்புறக் காணி மூலையில் மாட்டுப்பட்டிகள் அமைந்திருந்தன. அவற்றில் சேரும் பட்டி எரு விவசாய உற்பத்திக்குப் போதுமானதாக இருந்தது. எனினும் குடலைப் பருவத்தில் உற்பத்தியை அதிகரிப்பதற்காக ‘யூரியா’ பசளையை ஒருமுறை வீசுவதுண்டு.

ஆனால், இங்கும் காலப்போக்கில் மெல்லமெல்ல மாட்டுப் பட்டிகளும் காணாமற்போக விவசாயம் முழுமையாக இரசாயனப் பசளைகள் மயப்பட்டது. அதன்பின்பு கிருமி நாசினிகளின் தேவையும் ஏற்பட்டு விட்டன. அதன் காரணமாக எமது விவசாயம் இறக்குமதி பசளைகள், கிருமிநாசினி என்பனவற்றில் தங்கியிருப்பது தவிர்க்கமுடியாததாகி விட்டது.

இதன்காரணமாக எமது உணவுப் பொருட்கள் நச்சு மயப்படுத்தப்பட்டு விட்டதென்ற குற்றச்சாட்டும் உண்டு. 2014 - 2015 காலப்பகுதியில் அநுராதபுரம், பொலநறுவை ஆகிய பகுதிகளில் கிருமிநாசினிகள், பாவனையால் நிலக்கீழ் நீர் மாசடைந்து 1/3 பகுதி மக்கள் சிறுநீரகப் பாதிப்புக்குள்ளானமையை மறந்து விடமுடியாது.

அவ்வாறான நிலையில்தான் அரசாங்கம் இரசாயனப் பசளைகளைத் தடை செய்துள்ளதுடன், சேதனப் பசளை பாவனைக்கு ஊக்கமளித்து வருகிறது.

இந்நடவடிக்கை காலம் கடந்து மேற்கொள்ளப்படுகிறது என்றாலும்கூட ஒரு சுதந்திரமான விவசாய உற்பத்தியை நோக்கிய திசையில் செல்வதை வரவேற்காமல் இருக்கமுடியாது. ஆனால், இப்படியான திட்டங்கள் யதார்த்த நிலைமைகள் தொடர்பான பூரண அறிவும், ஆய்வும் இல்லாமல் வகுக்கப்படும்போது வெற்றி பெறமுடியுமா என்பது சந்தேகமே.

எமது பாரம்பரிய விவசாய முறையில் மொட்டைக் கறுப்பன், சீனட்டி பச்சைப் பெருமாள் போன்ற நெல்லினங்கள் பாவனையில் இருந்தன. அவை வறட்சியைத் தாங்கி வளரத்தக்கவையாகவும் கூடுதலான ருசி, ஊட்டச்சத்து கொண்டவையாகவும் அமைந்திருந்தன. இரசாயனப் பசளைகள் பாவனைக்கு வந்த பின்பு அவை காணாமற் போக எம்.4இல் ஆரம்பித்து ‘பி’ ரக நெற்களுக்கு மாறிய பின்பு அதிக விளைச்சலை நோக்கிப் புதிய பதிய நெல்லினங்கள் களத்துக்கு வந்து விட்டன.

இவை சேதனப் பசளைகளுக்குப் பொருத்தமாக அமையுமா, போதிய விளைச்சலைத் தருமா என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் இந்த இனங்கள் உருவாக்கப்படும்போது இரசாயனப் பசளைகளின் பாவனையை அடிப்படையாகக் கொண்டே வடிவமைக்கப்பட்டவை. மேலும் அவை கிருமி நாசினிகள் இன்றி நோய்த் தாக்கத்திலிருந்து பாதுகாக்ப்படும் என்பதும் சந்தேகமே.

எனவே, செயற்கைப் பசளையை முற்றாக நிறுத்துவதற்கு முன்பு சேதனப் பசளைகளுக்குப் பொருத்தமான நெல்லினங்கள் உற்பத்தி செய்யப்படுவதில் கவனம் செலுத்தப்படவேண்டும்.

உப உணவுப் பயிர்ச் செய்கையில் கூட முன்பிருந்த நீளமான கருஞ்சிவப்பு நிற திருநெல்வேலிக் கத்தரிக்காயையோ, மட்டுவில் குண்டுக் கத்தரிக்காயையோ, பூசணிக்காய் வடிவிலமைந்த தக்காளிப் பழத்தையோ குரங்குவாலன் பயிற்றங்காயையோ காண முடிவதில்லை. மரக்கறிகளும் செயற்கைப் பசளைகளுக்கும் கிருமி நாசினிக்களுக்கும் ஏற்ற வகையில் தங்கள் வடிவங்களையும் தன்மைகளையும் மாற்றி விட்டன. இனி அவை சேதனப் பசளையில் உரிய பலனைத் தருமா என் பதும் சந்தேகமே. அதைவிட கோவா, பீற்றூட், கரட், பெரிய வெங்காயம் என்ப னவற்றின் விதைகளும் இறக்குமதி செய்யப் படுபவையே. அவற் றிலிருந்து விதைகளைப் பெற முடியாது. அவை செயற்கைப் பசளையின்றிப் பலன் தருமா?

எனவே, நாம் இரசாயனப் பசளையிலிருந்து சேதனப் பசளைகளுக்கு மாற நெடுந்தூரம் பயணிக்க வேண்டியுள்ளது. அதுமட்டுமின்றி பலவித நெருக்கடிகளுக்கும் முகம்கொடுத்து வெற்றி கொள்ள வேண்டியுள்ளது.

இப்படியான முறையில் போதிய தயாரிப்புமின்றி, முன் தயாரிப்புகளும் ஆய்வு ரீதியான ஏற்பாடுகளுமின்றி “எடுத்தேன், கவிழ்த்தேன்” என்ற வகையில் செயல்படுவது படுகுழியில் விழுவதற்கு ஒத்ததாகும்.

“பொஸ்பேற்” எமது மண்ணான வடமத்திய மாகாணத்தின் “எப்பாவெல” பகுதியில் விளையும் கனிமப் பொருள், எமது மண்ணில் விளையும் இந்த இயற்கை கனிமத்தை நாம் எமது சேதனப் பசளை உற்பத்தி ஆய்வுகள் மூலம் பயன்படுத்தமுடியும். ஆனால் நாமோ அந்த மலையையே அமெரிக்க நிறுவனத்துக்கு விற்றுவிட்டு அவர்களிடம் உரப் பசளைகளைப் பணம் கொடுத்து வாங்குகிறோம். எனவே இவையெல்லாம் மறுபரிசீலணைக்குரிய விடயங்கள்.

வன்னியில் பொருளாதாரத் தடை, பசளைத் தடை என்பன விதிக்கப்பட்டிருந்தபோது “அமுதம்” என்றொரு பசளை உற்பத்தி செய்யப்பட்டு பயன்படுத்தப் பட்டமை குறிப்பிடத்தக்கது.


இப்படியாக நிலைமாறுகால முயற்சிகளை மேற்கொள்ளும்போது எமது விவசாயப் பொருளாதாரம் தங்கள் கைகளை விட்டு நழுவிச் செல்வதை விரும்பாத ஏகாதிபத்திய சக்திகள் பலவிதமான நெருக்கடிகளைக் கொடுக்கும். அவற்றை எதிர்கொண்டு வெற்றி கொள்ளவும் தயாராயிருக்க வேண்டும்.

அடிப்படையில் நாடு தற்சமயம் எதிர்கொண்டுள்ள அந்நியச் செலாவணி நெருக்கடியை எதிர்கொள்ள மேற்கொள்ளும் ஒரு தற்காலிக ஏற்பாடாக இல்லாமல், உண்மையாகவே தேசப்பற்றுடன், தன்னிறைவுப் பொருளாதாரத்தை நோக்கி இந்நடவடிக்கை எடுக்கப்படுமானால் இது நிச்சயம் வெற்றி பெறும். **- நன்றி அருவி**

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி**


மாதிரிப் பரீட்சை
விடைத்தாள் - I, II
நேரம் - 45 நிமிடம்

35. 

கட்டத்தினுள் தரப்பட்டுள்ள வடிவங்களை அவதானித்து சரியான விடையைத் தெரிவு செய்க.

1) 2 செவ்வகங்கள், 4 முக்கோணங்கள், 3 வட்டங்கள், 1 சதுரம்.
2) 1 சதுரம், 6 முக்கோணங்கள், 2 செவ்வகங்கள், 3 வட்டங்கள்.
3) 4 முக்கோணங்கள், 1 சதுரம், 2 செவ்வகங்கள், 1 வட்டம்.

36. பின்வரும் படத்தினை அவதானித்து விடை தருக.




A, B ஆகிய இரு பாத்திரங்களிலும் நீர் உள்ளது. அதில் B இலிருந்து 150ml நீர் A இனுள் ஊற்றப்பட்டது. மீண்டும் A இலிருந்து எத்தனை மில்லி லீற்றர் நீரை B இனுள் ஊற்றினால் இரண்டு பாத்திரங்களிலும் உள்ள நீர் சமனாகும்?

1) 50ml    2) 100ml    3) 25ml

37. தரப்பட்டுள்ள பாடல் வரிகளை ஒழுங்குபடுத்தும் சரியான விடை.

A – அதிகம் பேசி ஆடிடுமே!
B – நாக்கால் பூச்சி பிடித்திடுமே!
C – அழிவை அதுவே தேடிடுமே!
D – நதியில் நீச்சல் அடித்திடுமே!


1) A B C D    2) D B A C    3) D B C A

38. சுந்தரனின் வயது 10 வருடங்களாகும். அவனது தந்தையின் வயது சுந்தரனின் வயதின் 4 மடங்காகும். இன்னும் எத்தனை வருடங்களில் தந்தையின் வயது சுந்தரனின் வயதின் 3 மடங்காகும்.

1) 2 வருடங்கள்    2) 3 வருடங்கள்    3) 5 வருடங்கள்

39. கவிதா லதாவிலும் இளையவள், சுதா லதாவிலும் மூத்தவள் நிறோ, லதாவிலும் இளையவள் ஆனால் கவிதாவிலும் மூத்தவள் எனின் வயதில் இளையவர் யார்?

1) நிறோ    2) லதா    3) கவிதா

40. 

இவ்வுருவிலுள்ள முக்கோணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

1) 12    2) 13    3) 14

**01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்க.**

வேடன் எய்த அம்பினால் காயப்பட்ட கழுகு ஒன்று முனிசாமி என்பவரின் வீட்டுத் தோட்டத்தில் வந்து விழுந்தது. இதை அவனது மனைவி பொன்னம்மாள் கண்டாள். கழுகின் மீது இரக்கம் கொண்டு காயத்துக்கு மருந்து போட்டாள். இது முனிசாமிக்குப் பிடிக்கவில்லை. "கழுகு மோசமானது. கோழிக் குஞ்சுகளைத் திருடி உண்ணும் பறவை. அதற்கு இரக்கம் காட்டாதே" என்றான்.

1) வேடன் எய்த அம்பினால் காயப்பட்ட கழுகு எங்கே வந்து விழுந்தது?
.................................................................
2) பாணம் என்பதன் ஒத்த சொல் யாது??
.................................................................
3) உயர்திணை படர்க்கை ஆண்பால் வினைச் சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து எழுதுக?
.................................................................
4) அரவு மட்டும் இடம்பெறும் பெண்பால் வினைச் சொல்லைப் பந்தியிலிருந்து கண்டு பிடித்து எழுதுக?
.................................................................
5) வினையெச்சச் சொல்லைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக?
.................................................................
6) மோசமானது என்பதைப் பிரித்து எழுதுக?
.................................................................

**02. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் வெற்றிடத்திற்கு பொருத்தமான சொல்லின் கீழ் கோடிடுக.**

1) எங்கள் பாடசாலையில் நிறைய........................................ உண்டு (வளங்கள், வழங்கள்)
2) வரிசையில் நிற்குமாறு மாணவர்கள் ........................................ (அரிவுறுத்தப்பட்டனர், அறிவுறுத்தப்பட்டனர்.
3) இன்றைய உலகில் மக்கள் ...................... சம்பாதிக்கவே விரும்புகின்றனர். (பனம், பணம்)

**03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

1) சுதந்திர தின விழாவின் போது (வான/வாண)........................................ வேடிக்கைகள் காட்டப்பட்டன.
2) நீண்ட நாட்கள் நோய் நொடியின்றி உயிர் வாழ வேண்டுமானால் .............................. (ஊன்/ஊண்) ஆகாரங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

**04. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியமும் சரியாக எழுதப்பட்டிருப்பின் (✓). எனவும் பிழையாக எழுதப்பட்டிருப்பின் (×) எனவும் வாக்கியத்திற்கு எதிரே உள்ள அடைப்புக்குள் இடுக.**

1) இன்றைய உலகில் எல்லோருக்கும் வேலைப்பழு அதிகம் ( )
2) ஒரு ஊரில் ஓர் மாளிகை இருந்தது. ( )
3) தொலைக்காற்சி ஒரு கட்புல செவிப்புல சாதனமாகும். ( )
4) எனக்கு ஆடலும் பாடலும் மிகவும் விருப்பமானது. ( )

**05. கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்திலும் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்றொடருக்குப் பொருத்தமான கருத்தை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) பிரச்சினைகள் வரும் வேளை அவற்றிற்குத் தைரியமாக **முகங்கொடுத்தல்** வேண்டும். (எதிர்கொள்ளல்/முகத்தைக் காட்டுதல்)
2) அரண்மனைக் காவலாளிகளைக் கண்டதும் திருடர்கள் **கம்பி நீட்டினர்.** (ஓடி விட்டனர்/மறைந்து விட்டனர்)



# தொற்றாளர்களால் நிரம்பி வழியும் ராகமை; சுகாதார அமைச்சர் பவித்ரா திடீர் விஜயம்



கொழும்பு, ஓக. 06

கொழும்பு புறநகர் பகுதியில் உள்ள ராகமை போதனா வைத்தியசாலையின் கொரோனா சிகிச்சை விடுதிகள் தொற்று நோயாளர்கள் நிரம்பி, நோயாளர்கள் நடைபாதைகளில் தங்கவைக்கப்பட்டிருந்தமை தொடர்பான காணொலிகள் சமூக ஊடகங்களில் மிக வேகமாகப் பரவி வருகின்றது. இந்நிலையில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி நேற்றுமுன்தினம் மாலை அந்த வைத்தியசாலைக்கு திடீர் கண்காணிப்பு விஜயத்தை மேற்கொண்டார்.

அவர் அங்கு வைத்தியசாலைப் பணிப்பாளர் மற்றும் பணியாளர்களைச் சந்தித்துப் பேசினார்.

இதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சுகாதார அமைச்சர், ராகமை வைத்தியசாலையில்கொரோனாத் தொற்று நோயாளர்களுக்கு சிகிச்சை அளிக்க மேலதிக விடுதிகளை ஒதுக்க சுகாதார அமைச்சு முடிவு செய்துள்ளது என்று கூறினார்.

இதேவேளை, வைத்தியசாலையில் சேர்க்கப்படும் கொரோனாத் தொற்று நோயாளர் தொகை அதிகரித்து வருவதால் அவர்களைச் சமாளிக்க சிரமம் ஏற்படுகின்றது என ராகமை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் சம்பத் லியனகே ரணவீர தெரிவித்தார்.

வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சை மையத்தின் படுக்கைகளை அதிகரிக்க வேண்டும் எனவும், அதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன எனவும் அவர் கூறினார்.

கொரோனா நோயாளிகளுக்கான மற்றொரு 28 படுக்கைகள் கொண்ட விடுதி இந்த வாரம் திறக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். அதேவேளை, மருத்துவர்கள் மற்றும் ஊழியர்களும்தற்போது மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றி வருகின்றனர் எனவும், வைத்தியசாலையில் பணியாற்றும் இரண்டு பணியாளர்கள்மற்றும்10 தாதியர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகிப் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)



## கைவிலங்குடன் வந்து மாமியாருக்கு இறுதி மரியாதை செலுத்திய ரஞ்சன்

கொழும்பு, ஓக. 06

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் நான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க, தனது நெருங்கிய உறவினர் ஒருவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ரஞ்சன் ராமநாயக்கவின் உறவினரின் கோரிக்கைக்கு அமைய இறுதிச்சடங்கில்கலந்துகொள்ள நீதிமன்றம் விசேட அனுமதி வழங்கியதையடுத்து அவர் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டுள்ளார்.

அதன்படி, ரஞ்சன் ராமநாயக்க அங்குனகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் கைவிலங்குடன் இறுதிச்சடங்குக்கு சிறைச்சாலை பஸ்ஸில் நேற்று முன்தினம்அழைத்து வரப்பட்டார்.

அவரது மைத்துனர் ஒருவரின் தாய் உயிரிழந்ததைத் தொடர்ந்து, நீர்கொழும்பு பிரதேசத்தில் உள்ள மரண வீடொன்றுக்கே அவர் இவ்வாறு அழைத்து வரப்பட்டார். ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின்பெர்னாண்டோ உள்ளிட்ட பலர் இந்த இறுதிச்சடங்கில் கலந்துகொண்டனர். (இ)

# டெல்டா தொற்று தீவிரம் மக்களே மிக அவதானம்

## மருத்துவர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை



**கொழும்பு, ஓக. 06**

**“கொரோனா வைரஸின் திரிபடைந்த டெல்டா தொற்று நாட்டில் தீவிரமடைந்திருக்கின்றது. இந்த ஆபத்து நிலைமையை உணர்ந்துகொண்டு மக்கள் மிகவும் அவதானத்துடன் செயல்பட வேண்டும்.”**

-இவ்வாறு கொழும்பு ஸ்ரீஜெயவர்தனபுர பல்கலைக்கழகத் தின் ஒவ்வாமை, நீர்ப்பீடனம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் மருத்துவர் சந்திம ஜீவந்தர எச்சரிக்கை விடுத்தார்.

டெல்டா தொற்றை அடையாளம் காண்பதற்கான ஆய்வுகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன என்றும் அவர் கூறினார்.

இதுவரைகிடைத்தமாறுபட்ட கொரோனா வைரஸ் தொற்றின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வரும் நிலையில், எதிர்வரும் சனிக்கிழமை இறுதி அறிக்கையை வெளியிட எதிர்பார்த்துள்ளோம் என்றும் சந்திம ஜீவந்தர அவர் குறிப்பிட்டார். (இ)

# ‘டெங்கு’ உயிரிழப்புகளும் இலங்கையில் அதிகரிப்பு

## சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு



கொழும்பு, ஓக. 06

ஒருவருக்கு இரண்டு நாட்களுக்கு மேல் காய்ச்சல் நீடித்தால் உடனடியாக மருத்துவ ஆலோசனையைப் பெற்றுக்கொள்ளுமாறு பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

குறிப்பாக நாட்டில் டெங்கு நோய் காரணமாக தற்போது உயிரிழப்புகள் அதிகரித்துள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

டெங்கு நோய் கொரோனாவைப் போல் இல்லை என்றும், சமூக இடைவெளியைக் கடைப்பிடிப்பதால் அதில் இருந்து பாதுகாப்புப் பெற முடியாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (இ)

## வயல் காணியை துப்புரவு செய்த குடும்பஸ்தர் விழுந்து உயிரிழப்பு!

### மாங்குளம் பொலிஸார் விசாரணை

முல்லைத்தீவு, ஓக. 06

முல்லைத்தீவு மாவட்டம், மாங்குளம் - அம்பகாமம் பகுதியில், வயல் காணியைத் துப்புரவு செய்த குடும்பஸ்தர் ஒருவர் திடீர் மரணமடைந்தார்.

அம்பகாமத்தை சேர்ந்த, 59 வயதுடைய சோமுஆறுமுகநாதன் என்பவர், தனது வயல் காணியைத் துப்புரவு செய்த நிலையில், முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த பிராந்திய ஊடகவியலாளர் ஒருவர், சம்பவ இடத்துக்குச் சென்று, காணியைத் துப்புரவு செய்த நபரிடம் ஆவணங்களைக் கோரியுள்ளார்.

இதன்போது, குறித்த பிராந்திய ஊடகவியலாளர், பொலிஸ் மற்றும் கிராம சேவகரை அழைத்த வேளையில், கிராம சேவகர் முன்னிலையில், பயந்த நிலையில் நின்ற, வயல் காணியைத் துப்புரவு செய்த குடும்பஸ்தர், வயல் காணியில் திடீரென்று விழுந்து மரணமடைந்தார். இந்தச் சம்பவம் தொடர்பாக, மாங்குளம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முல்லைத்தீவு நீதிவான் நேரில் சென்று, சம்பவ இடத்தைப் பார்வையிட்டு, சடலத்தையும் பார்வையிட்டதை அடுத்து, சடலம், பிரேத பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (இ)

## மண்மேடு சரிந்து வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

மாத்தளை, ஓக. 06

மாத்தளை மாவட்டம், மஹாவெல, கவுடுபெலல்ல பகுதியில் பாரிய மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

மண் அகழ்வுப் பணியில் ஈடுபட்டிருந்த, குருகஸ்பிட்டியவைச் சேர்ந்த 42 வயதான நபரே உயிரிழந்தார்.

உயிரிழந்தவரின் சடலம் மீட்கப்பட்டு, பிரேத பரிசோதனைக்காக மாத்தளை மாவட்ட பொது வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மஹாவெல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதன்போது லொறி ஒன்றும் மண்ணுக்குள் புதையுண்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ)



# திருமண நிகழ்வில் மின்னல் தாக்கி பங்களாதேஷில் 17 பேர் உயிரிழப்பு!

டாக்கா, ஓக. 06

பங்களாதேஷில் திருமண நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட குழுவினர் மின்னல் தாக்குத லுக்கு இலக்கானதில் குறைந் தது 17 பேர் உயிரிழந்தனர் எனச் செய்திகள் வெளியாகி உள்ளன.

நாட்டின் வட மேற்குப் பகுதியில் பத்மா நதிக்கரையில் படகு ஒன்றில் பயணித்த திரு மணக் குழுவினரே மின்னல் களின் தாக்குதலுக்கு இலக்காகி னர். மணமகன் சகிதம் மணப் பெண்ணின் இல்லத்துக்கு பட கில் சென்றவர்களில் 17 பேரே இந்த அனர்த்தத்தில் உயிரிழந்த னர் என்று கூறப்படுகிறது. மண மகன் உட்பட காயமடைந்த 14 பேர் மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடும்மழை பெய்துகொண் டிருந்தபோது திருமணக் குழு வினர் ஷிப்கஞ்ச் நகரில் ஆற்றுக் கரையை அண்மித்த வேளை யில் மின்னல்கள் அவர்களை தாக்கின என்று கூறப்படுகிறது.

பங்களாதேஷில் காடுகள் குறிப்பாக உயர்ந்த மரங்கள் அழிக்கப்பட்டு வருவதே மின் னல் தாக்குதல்கள் அதிகரிப்ப தற்குக் காரணம் என்று கூறப் படுகிறது. உயர்ந்த மரங்கள் இடிமின்னல் மின் வீச்சை வானத்திலேயே தடுத்து விடு கின்றன. பருவநிலை மாற்றம் காரணமாக பூமியும் வளிமண் டலமும் வெப்பமடைந்து வருவதால் உலகின் பல பகுதி களிலும் இடி மின்னல்கள் தீவிரமாகத் தாக்கத் தொடங்கி யுள்ளன என்று வானிலை நிபுணர்கள் கூறுகின்றனர். (ஐ)

# 3ஆவது ஊசி உடனே வேண்டாம் வறிய நாடுகளுக்கு பங்கிடுங்கள்!

## உலக சுகாதார அமைப்பு வலியுறுத்து

ஜெனிவா, ஓக. 06

செல்வந்த நாடுகள் தங்கள் மக்களுக்கு மூன்றாவது தடுப் பூசியை வழங்குவதற்கு முன்னர் வறிய நாடுகளுக்கு தடுப்பூசி கிடைக்க உதவ வேண்டும் - இவ்வாறு உலக சுகாதார நிறு வனம் வேண்டுகோள் விடுத்தி ருக்கிறது.

தங்கள் பிரஜைகளில் பெரும் பங்கினருக்கு இரண்டு தடுப்பூசி களை வேகமாக ஏற்றி முடித்த சில நாடுகள் அடுத்த கட்டமாக நோயாளிகள் மற்றும் பலவீன மான நிலைமையில் உள்ளவர் களுக்கு மூன்றாவதாக மேலும் ஓர் ஊசியை வழங்குவதற்கு ஆயத்தமாகி வருகின்றன. மிக வேகமாகப் பரவி வருகின்ற டெல்டா வைரஸ், தடுப்பூசி ஏற்றியோருக்கும் தொற்றி வரு கிறது. இதனால் பலவீனமான உடற்காப்பு சக்தி கொண்டோ ருக்கு மூன்றாவது தடுப்பூசி அவ சியம் என்று மருத்துவ அறிவிய லாளர்கள் பரிந்துரைத்துள்ளனர்.

இஸ்ரேல், ஜேர்மனி போன்ற நாடுகள் நோய் எதிர்ப்பு சக்தி குறைந்தவர்களுக்கு ஓர் ஊக்கி யாக மூன்றாவது தடுப்பூசியை ஏற்றுவதற்கு தீர்மானித்துள்ளன.




இந்த நிலையிலேயே அதனை நிறுத்துமாறு அல்லது தாமதிக்குமாறு உலக சுகாதார நிறுவனம் அதன் உறுப்பு நாடுகளைக் கேட்டிருக்கிறது.

சகல நாடுகளிலும் சனத் தொகையில் ஆகக் குறைந்தது பத்து வீதத்தினருக்காவது முத லாவது தடுப்பூசியை எதிர் வரும் செப்ரெம்பர் மாத இறு திக்குள் ஏற்றி முடிக்க வேண் டும் என்று உலக சுகாதார நிறுவனம் இலக்கு நிர்ணயித் துள்ளது. அதற்கு வசதியாக வளர்ந்த நாடுகள் மூன்றாவது தடுப்பூசித் திட்டத்தை செப் ரெம்பர் இறுதிவரை தாம தப்படுத்த வேண்டும் என்று சுகாதார நிறுவனத்தின் தலை வர் டெட்ரோஸ் அதானொம் கெப்ரேயஸிஸ் கேட்டுள்ளார்.

தங்களது மக்களை டெல்டா வைரஸிடம் இருந்து பாது காத்துவிட வேண்டும் என்று நாடுகள் கொண்டுள்ள கவ லையை, கரிசனையை ஏற்றுக் கொள்ள முடிகிறது. ஆனால், உலகளாவிய தடுப்பூசி உற்பத்தி யில் பெரும் பகுதியை தங்கள் மக்களுக்குப் பயன்படுத்திய நாடுகள் அதன் பிறகும் ஊசியை தங்கள் தேவைகளுக்கு ஒதுக்கு வதை ஏற்றுக்கொள்ள முடி யாது - என்று அவர் தெரிவித் துள்ளார். (ஐ)

# புகலிட கோரிக்கையாளர்களை திருப்பி அனுப்பும் அமெரிக்கா!

## மனித உரிமைகள் அமைப்புகள் கண்டனம்

வாஷிங்டன், ஓக. 06

கோவிட் -19 தொற்று நோய் கட்டுப்பாட்டு முன்னெச் சரிக்கை நடவடிக்கையின் கீழ் புகலிடக் கோரிக்கையாளர் களை எல்லைகளில் இடை மறித்து வெளியேற்றும் உத்த ரவை நீடிக்கும் ஜனாதிபதி ஜோ பைடனின் சமீபத்திய முடிவை அமெரிக்க மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் நிபுணர் கள் குழுவினர் கண்டித்துள்ள னர்.

கோவிட் -19 முன்னெச்சரிக் கையின் கீழ் மெக்ஸிகோவுடன் தெற்கு எல்லையைக் கடக்கும் பெரும்பாலான புகலிடக் கோரிக்கையாளர்களை தடுத்து நிறுத்தி வெளியேற்றும் உத்த ரவை மேலும் நீடிப்பதாக பைடன் நிர்வாகம் கடந்த திங் கட்கிழமை அறிவித்தது.

மனித உரிமைகளுக்கு முன் னுரிமை அளிக்கும் அமெரிக்கா வின் உள்நாட்டு மற்றும் வெளி விவகாரக் கொள்கைகளை தொடர்ந்து பேணும் பைட னின் வாக்குறுதிகளை மீறும் வகையில் இந்த நடவடிக்கை அமைந்துள்ளதாக அமெரிக்க மனித உரிமைகள் அமைப்புகள் மற்றும் நிபுணர்கள் குழுவினர் கண்டித்துள்ளனர்.

“இது தவறான நடவடிக்கை அத்துடன், வெட்கக்கேடானது” என யுனைடெட் வீ ட்ரீம் அகதி கள் உரிமைகள் அமைப்பின் நிறுவநர் கிறிஸ்டினா ஜிமி னெஸ் தெரிவித்துள்ளார். (ஐ)



# இந்தியாவில் வெள்ளம் 23 பேர் உயிரிழப்பு!

கொல்கத்தா, ஓக. 06

இந்தியாவின் மேற்கு வங்கம் மாநிலத்தில் பெய்து வரும் கன மழை மற்றும் வெள்ளப்பெருக் கால் ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி குறைந்தது 23 பேர் உயிரி ழந்தனர்.

மெதினாபூர், ஹூக்ளி, ஹவுரா உள்ளிட்ட 6 மாவட் டங்களில் பெருவெள்ளம் சூழ்ந் துள்ளதால் அங்கிருந்து சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். இதனி டையே வெள்ளத்தால் பாதிக் கப்பட்ட ஹவுரா மாவட்ட பகுதிகளை மேற்கு வங்க முதல மைச்சர் மம்தா பானர்ஜி நேற்று முன்தினம் நேரில் ஆய்வு செய் தார். அப்போது அங்கிருந்த மக்களுடனும் அவர் கலந்துரை யாடினார்.

இதனை தொடர்ந்து பிரத மர் நரேந்திர மோடி உடன் வெள்ள பாதிப்புகள் குறித்து மம்தா பானர்ஜி தொலைபேசி வாயிலாக ஆலோசனை நடத்தி னார்.

இதேவேளை, ராஜஸ்தான் மாநிலத்திலும் கனமழை தொடர்ந்து வரும் நிலையில் கோட்டா மாவட்டத்தின் இதாவா பகுதியில், 40 பேரு டன் சென்ற பேருந்து வெள்ள நீரில் சிக்கிக்கொண்டது. பின்னர் விரைந்து வந்த மாநில பேரிடர் மீட்பு படையினர் போராடி அனைவரையும் மீட் டனர். (ஐ)

# பர்தா அணியாத இளம் பெண் தலிபான்களால் சுட்டுக்கொலை!

காபூல், ஓக. 06

ஆப்கானிஸ்தானில் பர்தா அணியாத 21 வயதான இளம் பெண்ணை தலிபான் அமைப் பினர் சுட்டுக் கொன்ற சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பால்க் மாவட்டத்தைச் சேர்ந்தவர் நசானீன். 21 வய தான இவர் புதன்கிழமை காரில் தனது சொந்த மாவட்டத்திற்கு திரும்பிக் கொண்டிருந்தார். அப்போது அவரை இடை மறித்த தலிபான்கள் அவர்களின் மத நம்பிக்கையின்படி பர்தா அணியாதமையை கண்டித்து பர்தா அணிய வற்புறுத்தியுள்ள னர். இதனை அவர் மறுக்கவே ஆத்திரமடைந்த தலிபான்கள் அவரை சுட்டுக் கொன்றனர். இதற்கு பலரும் கண்டனம் தெரி வித்துள்ளனர். (ஐ)




# உலகில் உயரமான இடத்தில் வீதி அமைத்தது இந்தியா!

புதுடில்லி, ஓக. 06

உலகிலேயே அதிஉயரத்தில் வீதியைக் கொண்ட நாடு என்ற பெருமையை இந்தியா பெற் றுள்ளது. கிழக்கு லடாக்கின் - உம்லிங்லா கணவாய் பகுதியில் 19 ஆயிரத்து 300 அடி உயரத்தில் 52 கி.மீற்றர் நீளமான வீதியை அமைத்ததன் மூலமே இந்தப் பெருமையை இந்தியா பெற்றது.

இதன்கு முன்னர், பொலி வியா நாட்டில் உதுருஞ்சு எரி மலைக்கு செல்லும் வீதி, 18 ஆயிரத்து 953 அடி உயரத்தில் அமைக்கப்பட்டதே சாதனை யாக இருந்தது.

இந்தியா அமைத்துள்ள உம்லிங்லா இந்த வீதி லடாக் கின் பொருளாதாரத்தில் முக்கிய பங்காற்றும். இந்த வீதி கிழக்கு லடாக்கின் சுமர் செக்டாரில் உள்ள முக்கிய நகரங்களை இணைக்கிறது என்பது குறிப் பிடத்தக்கது. (ஐ)

# ஊரடங்கின் மத்தியிலும் ஆஸியில் தொற்று உயர்வு

சிட்னி, ஓக. 06

அவுஸ்திரேலியாவில் பல மாதங்களில் இல்லாத அளவுக்கு, நியூ சவுத் வேல்ஸ் மாநிலத்தில் நேற்று 262 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள் ளது.

நியூ சவுத் வேல்ஸ் மாநிலத் தில் கடந்த 6 வாரங்களாக ஊர டங்கு உத்தரவு நடைமுறை யிலுள்ளது. இருப்பினும் பல மாதங்களில் இல்லாத அளவுக்கு சிட்னி நகரில் தொற்றாளர் எண் ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் நேற்றைய தினம் கோவிட் - 19 தொற்றால் 5 பேர் உயிரிழந்தனர். (ஐ)

### இந்தியாவுடனான முதல் டெஸ்ட்

# 183 ஓட்டங்களுக்கு சுருண்டது இங்கிலாந்து!

நாட்டிங்ஹாம், ஒக. 06

பும்ரா, சமியின் அசத்தல் பந்து வீச்சால் இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 183 ஓட்டங்களுடன் சுருண்டது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடி வரும் இந்தியா வலுவான நிலை நோக்கி நகர்ந்து வருகின்றது.

இங்கிலாந்துக்கு சென்றுள்ள இந்திய அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதலாவது டெஸ்ட் போட்டி நேற்று நாட்டிங்ஹாமில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

ரொறி பேர்ண்ஸ், சிப்லி இணை தொடக்கம் கொடுத்தது. பேர்ண்ஸ் ஓட்டம் எதையும் எடுக்காமல் ஆட்டமிழந்தார்.

சிப்லி 18, கிராவ்லி 27 என விக்கெட்களை பறிகொடுத்த நிலையில் அணித் தலைவர் ரூட் மட்டும் போராடினார். ஆனால், அவருக்கு மறுமுனையில் எவரும் துணை



நிற்கவில்லை. வீரர்கள் வருவதும் போவதுமாக இருந்தனர்.

இந்த நிலையில் அரைச்சதம் அடித்த ரூட் 64 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

இதனால், 65.4 ஓவர்கள் நிறைவில் 183 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது இங்கிலாந்து அணி.

இந்தியாவின் பந்துவீச்சில் அசத்திய பும்ரா 4 விக்கெட்களையும், முஹமட் சமி 3 விக்கெட்களையும், தாகூர் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணிக்கு ரோஹித் சர்மா, கே. எல். ராகுல் இணை தொடக்கம் கொடுத்தது.

இந்த இணை பொறுமையாக பந்துகளை தெரிவு செய்து விளையாடியது. முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தபோது இந்தியா 21 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்று போட்டி ஆரம்பித்தபோது தொடர்ந்து பொறுமையாக ஆடிய இந்த இணை, 35 ஓவர்கள் நிறைவில் விக்கெட் இழப்பின்றி 88 ஓட்டங்களை எடுத்திருந்தது.

ரோஹித் சர்மா 35, கே. எல். ராகுல் 42 ஓட்டங்களை தமக்கிடையே பகிர்ந்து கொண்டனர். (ஐ)



## 18 ஆண்டுகளின் பின் பாகிஸ்தான் செல்கிறது நியூஸிலாந்து அணி!

லாகூர், ஒக. 06

18 ஆண்டுகளுக்குப் பின்னர் எதிர்வரும் செப்ரெம்பரில் நியூஸிலாந்து கிரிக்கெட் அணி பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளது.

பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் நியூஸிலாந்து, ராவல்பிண்டி மற்றும் லாகூரில் பாகிஸ்தான் அணியுடன் மூன்று ஒருநாள் போட்டி மற்றும் ஐந்து இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர்களில் விளையாடும் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நேற்று உறுதிப்படுத்தியது.

2003 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் பாகிஸ்தானுக்கு சுற்றுப் பயணம் சென்ற பின்னர் நியூஸிலாந்து பாகிஸ்தானுக்கு செல்வது இதுவே முதன்முறையாகும். செப்ரெம்பர் 17ஆம் திகதி ஒருநாள் தொடர் ராவல்பிண்டியில் ஆரம்பமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)




## பங்களாதேஷிடம் மீண்டும் வீழ்ந்தது அவுஸ்திரேலியா!

டாக்கா, ஒக. 06

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான இரண்டாவது இருபது - 20 போட்டியையும் பங்களாதேஷ் அணி 5 விக்கெட்களால் வெற்றி கொண்டது.

பங்களாதேஷ் சென்றுள்ள அவுஸ்திரேலியா அணி 5 போட்டிகள் கொண்ட இருபது - 20 தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியில் 23 ஓட்டங்களால் வெற்றி பெற்ற உற்சாகத்துடன் பங்களாதேஷ் இரண்டாவது போட்டியில் களமிறங்கியது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

தொடக்க வீரர்கள் சொதப்பிய நிலையில், மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த மிற்செல் மார்ஸ், ஹென்றிக்கியூ இணை ஓரளவுக்கு பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர்.

ஹென்றிக்கியூ 30, மார்ஷ் 45 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர். அவுஸ்திரேலியா சார்பில் இந்தப் போட்டியில் அதிக ஓட்டமாக மார்ஷ் 45 ஓட்டங்களே அமைந்தது.

20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்களை இழந்த அவுஸ்திரேலியா அணி 121 ஓட்டங்களைப் பெற்றது.

பங்களாதேஷின் பந்துவீச்சில் முஸ்தபீர் ரஹ்மான் 3 விக்கெட்களையும், சொரிபுல் இஸ்லாம் 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணிக்க தொடக்கம் சரியாக அமையவில்லை. எனினும் பின்னர் வந்த சகீப் அல்ஹசன் 26, மஹெடி ஹசன் 23 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க, அபிப் ஹூசைன் 37, நருல் ஹசன் 22 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றனர்.

18.4 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 123 ஓட்டங்களைப் பெற்று 5 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் மிற்செல் ஸ்ராக், ஹசல்வூட், அகர், அடம் ஷம்பா, அன்று ரை ஆகியோர் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர். போட்டியின் நாயகனாக அபிப் ஹூசைன் தெரிவானார். (ஐ)




## 110 மீற்றர் தடை தாண்டல்: ஜமேக்கா வீரருக்கு தங்கம்!

ரோக்கியோ, ஒக. 06

110 மீற்றர் தடை தாண்டல் போட்டியில் ஜமேகாவின் ஹான்ஸ்லே பார்ச்மென்ட் தங்கப் பதக்கம் வென்றார்.

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் நேற்று வியாழக்கிழமை நடந்த போட்டிகளில், 110 மீற்றர் தடை தாண்டல் போட்டியும் நடந்தது.

இதில், ஹான்ஸ்லே தங்கப் பதக்கம் வென்றதன் மூலம் உலக சம்பியனான அமெரிக்காவின் கிராண்ட் ஹாலோவேயை தோற்கடித்தார்.

ஹோலோவே 13:09 செக்கன்களில் இலக்கை நிறைவு செய்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். மற்றொரு ஜமேக்காவைச் சேர்ந்த வீரரான ரொனால்ட் லெவி 13:10 செக்கன்களில் இலக்கை நிறைவுசெய்து வெண்கலம் வென்றார்.

ஹான்ஸ்லே முன்னதாக 2012 ஒலிம்பிக்கில் வெண்கல பதக்கம் வென்றிருந்தார். இந்த நிலையில் தற்சமயம் தனது இலக்கை 13:04 செக்கன்களில் நிறைவுசெய்து தங்கப் பதக்கம் வென்றுள்ளார்.

## குண்டு எறிதல் போட்டியில் அமெரிக்கா சாதனை தங்கம்!

ரோக்கியோ, ஒக. 06

22. 30 மீற்றர் தூரத்துக்கு குண்டு எறிந்து சாதனை படைத்த அமெரிக்க வீரர் தங்கப் பதக்கம் வென்றார்.

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் ஆண்களுக்கான குண்டு எறிதல் போட்டி நேற்று காலை நடைபெற்றது.

இதில் அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று வீரர்கள், நியூஸிலாந்தை சேர்ந்த இரண்டு வீரர்கள் உட்பட 12 பேர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு வீரர்களும் தலா ஆறு முறை குண்டு எறிதல் வேண்டும். ஆறு வாய்ப்புகளில் எந்த வாய்ப்பில் வெகுதூரத்திற்கு குண்டு எறிந்தார்களோ, அது அவருடைய செயல்பாடாக ஏற்கப்படும்.

அமெரிக்க வீரர் ரியான் குரோசர் 6ஆவது வாய்ப்பில் 23.30 மீற்றர் தூரத்திற்கு குண்டு எறிந்து தங்கப்பதக்கம் வென்றார். அத்துடன், ஒலிம்பிக் சாதனையையும் பதிவு செய்தார்.

மற்றோர் அமெரிக்க வீரரான ஜோ கோவாக்ஸ் 22.65 மீற்றர் தூரம் எறிந்து வெள்ளி பதக்கம் வென் றார். நியூஸிலாந்து வீரர் தோமஸ் வோல்ஷ் 22.47 மீற்றர் தூரம் எறிந்து வெண்கலப் பதக்கம் வென்றார். (ஐ)

## சீனா ஆதிக்கம் தொடர்கின்றது

ரோக்கியோ, ஒக. 06

ரோக்கியோவில் நடக்கும் ஒலிம்பிக் போட்டியில் 33 தங்கப் பதக்கங்களுடன் சீனா முதலிடத்தைப் பிடித்துள்ளது. பதக்கங்களின் எண்ணிக்கை அடிப்படையில் 89 பதக்கங்களை அமெரிக்கா வென்றுள்ளது.

நேற்று மாலை 5 மணி வரையான நிலைவரப்படி, சீனா, 33 தங்கம், 24 வெள்ளி, 16 வெண்கலங்களுடன் 73 பதக்கங்களுடன் முதலிடத்தில் உள்ளது.

அமெரிக்கா 29 தங்கம், 34 வெள்ளி, 26 வெண்கலங்களுடன் 89 பதக்கங்களை வென்று இரண்டாவது இடத்திலும், போட்டியை நடத்தும் ஜப்பான் 21 தங்கம், 9 வெள்ளி, 14 வெண்கலங்களுடன் 44 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

நேற்று வரை இலங்கை எந்தப் பதக்கத்தையும் வெல்லவில்லை. (ஐ)

பெண் எம்.பி.க்களை இழிவுபடுத்தியபோது

# சபையில் நான் சிரிக்கவில்லை!

சபாநாயகர் தன்னிலை விளக்கம்



கொழும்பு, ஓக. 06

"சபையில் பெண் எம்.பி.க்களை சில எம்.பி.க்கள் வாய்மொழியாக இழிவுபடுத்தியபோது நான் சிரிக்கவில்லை. ஏனெனில், அப்போது நான் சபா பீடத்தில் இருக்கவில்லை."

- இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "ரோஹிணி குமாரி கவிரத்ன எம்.பி. செவ்வாய்க்கிழமை ஒழுங்குப்பிரச்னை ஒன்றை எழுப்பியிருந்தார். அதில் அவர், ஜூலை 20 ஆம் திகதி எரிபொருள் அமைச்சர் உதய கம்மன்பிலவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதத்தின்போது உரையாற்றிய தலதா அத்துகோரள எம்.பியை சில எம்.பி.க்கள் வாய் மூல தவறான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தி விமர்சித்ததாகவும் அப்போது சபா பீடத்திலிருந்த நான்சிரித்துக் கொண்டிருந்தேன் எனவும் கூறினார்.

அத்துகோரள எம்.பியை சில எம்.பி.க்கள் வாய் மூல தவறான வார்த்தைப் பிரயோகங்களை பயன்படுத்தி விமர்சித்த போது நான்சிரித்தேன்எனக்கூறும் கூற்றை நான் முற்றாக நிராகரிக்கின்றேன். அந்த நேரத்தில் நான் சபாபீடத்தில் இருக்கவில்லை என்பதை ரோஹிணி குமாரி கவிரத்ன எம்.பிக்குத் தெரிவிக்கின்றேன்.

எனவே, இவ்வாறான தவறான கூற்றுக்களை அக்கிராசனம் மீது முன்வைப்பது அக்கிராசனத்துக்கு பங்கம் விளைவிக்கும் செயலாகும். அத்துடன் அவமதிக்கும் செயலாகும் என்பதையும் குறிப்பிட்ட எம்.பி.க்கு தெரிவிக்க விரும்புகின்றேன்" - என்றார். (இ)

# ஐ.டி.எச். வைத்தியசாலையும் அவசர நிலைமை அறிவிப்பு

கொழும்பு, ஓக. 06

கொழும்பு தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலை அவசர நிலையை அறிவித்துள்ளது.

நாளாந்தம் பதிவாகும் கொரோனா நோயாளர்கள் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளதைத் தொடர்ந்து இவ்வாறு அவசர நிலை அறிவிக்கப்பட்டுள்ளது என மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக, இரத்தினபுரி, கராப்பிட்டிய மற்றும் ராகம மருத்துவமனைகள் என்பன இவ்வாறு அவசர நிலையை அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ)

## மரண அறிவித்தல்

மலர்வு 08 - 07 - 1943



உதிர்வு 05 - 08 - 2021

### சின்னையா துரைசாமி

திஸ்பணைதோட்டத்தை வசிப்பிடமாக கொண்ட சின்னையா துரைசாமி இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னையா – ராசம்மா தம்பதியரின் செல்வப் புதல்வனும், ஜெயலட்சுமியின் அன்புக் கணவரும், லட்சுமானந்தபகவான், யோகா, சசி ஆகியோரின் தந்தையும், தர்மலிங்கம், சண்முகவேல், ராசலிங்கம், ராஜேந்திரன் பாக்கியவதி, மகேஷ்வரி, விஜயகுமாரி ஆகியோரின் அன்பு அண்ணனும், பவன், யோகா, சசி ஆகியோரின் தந்தையும், கிருஷ்ணா (டான் தொலைக்காட்சி), பிரஷாந்த் (டான் தொலைக்காட்சி), சண்முகவேல் தினேஷ்குமார் (ஆசிரியர்), பிரியா, ஜெகதீஸ்வரன், மனோகரி, ஜெகதீஸ்வரி, உஷாந் திணி, துஷாந்தினி,கயான் ஆகியோரின் பெரியப்பாவும், சுகன்யா, அரன்யா, அபிசங்கர், விஜய், டினக்சனாகுமாரி, துசியந்தன், கோகிலா, வைஷ்ணவி, தீபிகா, வாணிப்பிரியா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (06.08.2021) வெள்ளிக்கிழமை தலவாக்கலையில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம் கிருஷ்ணா
(டான் தொலைக்காட்சி)

தொடர்புகளுக்கு:
0779891281

# மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்றாளர் எண்ணிக்கை அதிகரிப்பு

மன்னார், ஓக. 06

மன்னார் மாவட்டத்தை அனைத்து தரப்பினருடைய ஒத்துழைப்போடும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்த போதும் ஒரு சில நாட்களில் மாவட்டத்தில் கொரோனா தொற்று வேகமாக அதிகரித்துள்ளது என மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தெரிவித்தார்.

மன்னார் மாவட்டத்தில் கொரோனா தொற்று தொடர்பாக அதிகாரிகளுடன் நேற்று வியாழக்கிழமை மன்னார் மாவட்ட செயலகத்தில் விசேட கலந்துரையாடல் இடம்பெற்றது.

குறித்த கலந்துரையாடலில் துறை சார் அதிகாரிகள்,சுகாதார துறையினர், இராணுவம், பொலிஸ், கடற்படை அதிகாரிகள், மற்றும் திணைக்கள அதிகாரிகள் பங்கேற்றனர்.

இதன்போது கருத்து தெரிவிக்கையிலேயே மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில நாட்களில் அதிக எண்ணிக்கையில் கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்டத்தை அனைத்து தரப்பினரின் ஒத்துழைப்போடும் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தோம். ஆனால், ஒரு சில நாட்களில் மாவட்டத்தில் கொரோனா தொற்று வேகமாக அதிகரித்துள்ளது.

பொதுமக்கள் சுகாதார வழிகாட்டுதலை கடைப்பிடிப்பதில் தவறி உள்ளார்கள் என்று சந்தேகம் ஏற்பட்டுள்ளது.எனவே, பொது மக்கள் மீண்டும் மிக இறுக்கமாக சுகாதார நடைமுறைகளை கடைபிடிக்க வேண்டும் என்பதை ஆராய்ந்துள்ளோம்.

துறை சார் திணைக்கள தலைவர்கள் இவ்விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். குறிப்பாக மக்கள் பொது இடங்களில் எச்சில் துப்புதல் போன்ற விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் தமது கைகளை கழுவி, சுகாதார நடைமுறையுடன் செயல்பட வேண்டும். போக்குவரத்து துறை சார்ந்தவர்களுக்கு அறிவித்தல்களை வழங்கி உள்ளோம்.பேருந்தில் ஆசனத்திற்கு ஏற்ப மாத்திரம் பயணிகளை ஏற்ற வேண்டும் எனவும்,மேலதிகமாக ஏற்றக்கூடாது. பேருந்தில் அதிக எண்ணிக் கையாக பயணிகளை ஏற்றும் பேருந்தின் சாரதி மற்றும் நடத் துநர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள இராணுவம் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு பணித்துள்ளோம். இவ்வாறான நடவடிக்கைகள்மூலம் மக்களை பாதுகாக்க முடியும்.

அதிகமானவர்கள் முகக்கவசங்களை நாடிக்கு அணிபவர்களாகவே உள்ளனர்.எனவே இவ்விடயத்தில் கவனம் செலுத்தி,உரிய முறையில் முகக்கவசத்தை அணிவதற்கு மக்களை வலியுறுத்த வேண்டும். மக்கள் கூடுகின்ற இடங்க ளில் பொது சுகாதார பரிசோதகர்கள் தமது கவனத்தை செலுத்த வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப் பட்டுள்ளது.

மக்களின் தேவை யற்ற நடமாட்டம் அதிகரித் துள்ள நிலையில், கொண்டாட்டம், ஆலய திருவிழாக்கள் போன்றவற்றில் மக்கள் அதிக மாக ஒன்று கூடுவதை தடுக்கு மாறும் கோரியுள்ளோம்.

பொதுமக்கள் அதிகாரிகளுடன் முரண்படுகிற நிலையும் ஏற்படும்.எனினும் அதை பொறுத்துக் கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டும் -என்றார்.

# யானை தாக்கி விவசாயி மரணம்!

மட்டக்களப்பு, ஓக. 06

மட்டக்களப்பு மாவட்டத்தின் கிரான் பிரதேச செயலாளர் பிரிவின் கல்கேணி எனும் வயல் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு காட்டு யானையின் தாக்குதலுக்குள்ளாகி குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தாரென வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தில் பொட்டுக்குளம் வாகனேரி கிராமத்தைச் சேர்ந்த ஆறு பிள்ளைகளின் தந்தையான சின்னதம்பி வேலுப்பிள்ளை (வயது 59) என்பவரே உயிரிழந்தார்.

இவர் வழமை போன்று வயல் வேலைகளை முடித்து விட்டு தமது இருப்பிடம் நோக்கி சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் காட்டுக்குள் இருந்து பிரவேசித்த யானை இவரைத் தாக்கியுள்ளதாக கூறப்பட்டது.

## மரண அறிவித்தல்

மலர்வு 25 - 07 - 1933



உதிர்வு 03 - 08 - 2021

### திருமதி நேசரெத்தினம் தம்பிராசா

எருவில் கிழக்கு பாரதிபுரத்தை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசரெத்தினம் தம்பிராசா 03.08.2021 செவ்வாய்க்கிழமைஅன்று இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – சங்குவதிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகளும், காலஞ்சென்ற தம்பிராசாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பாலிப்போடி – செம்பகணாச்சி தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சந்திரசேகரம், சீதாலெட்சுமியின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, சின்னத்தம்பி, கனகரெத்தினம், இராசதுரை, இளையதம்பி, தெய்வானை, குணநாயகி மற்றும் குமாரப்போடி, பொன்னம்மா, சௌந்தரி, பூபதி, சீவரெத்தினம், காந்தமலர் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான தம்பிராசா, ஏகாம்பரம், மைலிப்போடி, ஆறுமுகம், யோகராஜா மற்றும் செல்வராசா, வையாளிப்போடி ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும், விக்னேஸ்வரன், விக்னேஸ்வரி, நீலவேணி, மகேஸ்வரன் காலஞ்சென்றதில்லேஸ்வரன், செந்தூர் (London), பத்மினிதேவி, கயிலைநேசன், கதிர்காமவேல் ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற இராசநாயகம் மற்றும் இராசநாயகி, வேதநாயகி, அன்னலெட்சுமி ஆகியோரின் அன்புப் பெரியம்மாவும், செல்வநாயகம், கிருபையம்மா, ஐயாத்துரை, புஸ்பவதி, அருணா (London), ஈஸ்வரன், உசாநந்தினி, சுகிதாசினி, மகேந்திரன், உதயகுமார், பேரின்பராசா ஆகியோரின் அன்புமாமியாரும், ஜீவராணி (ஆசிரியர் – வம்மிவட்டுவான்,வாகரை) தவேந்திரன் (தாதிய உத்தியோகத்தர் – களு வாஞ்சிகுடி), தேவரூபன் (விவசாய தொழில்நுட்ப உத்தியோகத்தர்), நிமல்ராஜ்,குணராஜ், ஜதுஸ்ராஜ், ரூபகாந்தன், துயந்தன்,கிருஸ்ரின் (மாவட்டநீதிமன்றம் – திருகோண மலை), வினேஸ்காந், சிவகுமார், சுகந்தினி ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும்,வேதரூபி, துஷாந்தினி, உருத்திராங்கரன், குணாநிதி, தர்சினி,தினேகா,பிரியா, லக்சிகா, ஆஹாஸ் பொருளியலாளர் London), அக்ஷயா (London), அஸ்வினி, டசாந், சிவசுப்பிரமணியம், துசாந்தினி, நிதர்சினி (தென்னை அபிவிருத்திஉத்தியோகத்தர்) ஆகியோரின் அன்பு அப்பம்மாவும், திவானு,பவிஷாந், ஆதிஷா, ஜஸ்மிகா, வவிசனா, லக்ஷித், லஸ்விந், கரிசினி, அக்ஷாத், திபிக்ஷா, சஸ்விதா, கிந்துஜன் ஆகியோரின் பாட்டியும் ஆவார்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

## ஹிஷாலினியின்...

அவர்களை தராதரம் பாராது தண்டிக்க வேண்டுமென இந்த உயரிய சபையில் வேண்டுகின்றேன் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் வன்னி மாவட்ட எம்.பி.யுமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

ஹிஷாலினியின் உயிரைப் பாதுக்காக போராடிய எனது மாமனாரும் சிறையில். ஒவ்வொருநாளும் வைத்தியசாலை சென்று தனது மகளைப்போன்று ஹிஷாலினியின் உயிரைப் பாதுகாக்க மருத்துவர்களிடம் மன்றாடிய எனது மனைவியும் சிறையில், கடந்த ஒன்றரை வருடங்களில் மிகப்பெரும் துன்பங்களை அனுபவிக்கும் அரசியல்வாதியாக நானும் எனதும் குடும்பமுமே உள்ளது என்றும் ரிஷாத் பதியுதீன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை, இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சட்ட மூலம் மற்றும் செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் கீழான கட்டளைகளும், ஆரம்ப சுகாதார சேவைகள், தொற்று நோய்கள் மற்றும் கோவிட் நோய்க் கட்டுப்பாட்டு அலுவல்கள் இரா ஜாங்க அமைச்சின் 2021ஆம் ஆண்டுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

ஹிஷாலினி 16 வயது பூர்த்தியடைந்த நிலையிலேயே எனது வீட்டுக்கு ஒருவர் மூலமாக வந்தார். அப்போதும் நான் சிறையில் தான் இருந்தேன். அப்போது ஹிஷாலினியின் வயது என்னவென தரகரிடம் கேட்டபோது 17 வயது என அவர் கூறியுள்ளார். அவருக்கு எனது வீட்டில் 7தர 6 ஆதி கொண்ட இணைந்த மலசலகூட வசதியுடனான அறை வழங்கப்பட்டது. இந்த அறையிலேயே இதற்கு முன்னர் பணி புரிந்தவர்களும் இருந்தனர்.

சமபவம் நடந்த 3 ஆம் திகதி கால 6.45 மணியளவில் சகோதரி ஹிஷாலினியின் சத்தம் கேட்டு அப்போது அதிகாலை தொழுகை முடித்து விட்டு தூங்கிக்கொண்டிருந்த எனது மாமனாரும் மாமியும் ஓடி வந்து பார்த்தபோது அவர் தீயில் எரிந்து கொண்டிருந்துள்ளார். உடனடியாக அவரை காப்பாற்ற போராடிய எனது மாமனார். ஒரு காபட் மூலம் தீயை அணைத்ததுடன் உடனடியாக அருகில் இருந்த தண்ணீர் தொட்டியினுள் அவரை இருத்தியுள்ளார். அப்போது அவர் கூல் தண்ணீர் கேட்கவே உடனடியாக அதனையும் வழங்கியதுடன் அவசர அம்புலன்சுக்கு காலை 7.05 மணிக்கு அறிவித்துள்ளார். அம்புலன்ஸ் மூலம் 7.33 மணிக்கு ஹிஷாலினி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதற்கான பதிவுகள். தொலைபேசி அழைப்பு பதிவுகள் உள்ளன. ஆனால் பொலிஸார் காலை 8.35 மணிக்கு தான் நாம் ஹிஷாலினியை வைத்தியசாலையில் சேர்த்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளதாக அறிகின்றேன்.

ஹிஷாலினி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நாள் முதல் எனது மனைவி தினமும் வைத்திய சாலை சென்று ஹிஷாலினியின் உயிரைப் பாதுகாக்காக போராடினார், மன்றாடினார். ஹிஷாலினிக்கு பிளாஸ்ரிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். சிங்கப்பூரிலிருந்து தோல், மருத்துவர்கள் செலவுகளையும் நான் ஏற்கின்றேன். ஹிஷாலினியை காப்பாற்றுங்கள் என என் மனைவி கூறியுள்ளார். ஹிஷாலினி தீமூட்டிய நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவுடன் உடனடியாக தாயாருக்கு அறிவித்தது அவரை வரும்படியும் தான் தருவதாகவும் எனது மனைவி கூறியுள்ளார்.

ஹிஷாலினி மிகவும் பண்பானவர். அவரின் தாயாரும் மிகவும் நல்லவர். ஆனால், தற்போது அரசியலில் வங்குரோத்தில் உள்ள சிலரும் ஒருசில ஊடக விபசாரிளும் அந்த தாயாரையும் உறவினர்களையும் தவறாக வழி நடத்துகின்றனர். ஹிஷாலினி வேலைக்கு வந்த இரு தினங்களிலேயே அவரின் தாயார் கேட்டு 40 ஆயிரம் ரூபாய் கொடுத்தோம். அதையடுத்து ஏழரை மாதங்களில் மட்டும் இரண்டரை இலட்சம் ரூபாய்க்கு மேல் வழங்கினோம். நாம் உண்ணும் உணவுகளையே ஹிஷாலினிக்கும் வழங்கினோம். எனது சகோதரி, தங்கை போலவே ஹிஷாலினியை நடத்தினேன். எனது வீட்டில் ஹிஷாலினிக்கு எந்த அசிங்கமும் இடம் பெறவில்லை என்பதனை உறுதியாக கூறுகின்றேன்"- என்றார்.

## இலங்கை...

முதலாவதாக அவசியமற்ற ஒன்றுகூடல்களை விழாக்களை தவிர்த்துக் கொள்ளுதல். அவசியமின்றி வீடுகளுக்கு வெளியே வருவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். வணக்கஸ்தலங்களில் இடம் பெறும் நிகழ்வுகளை உட்பிரகாரங்களில் மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட பக்தர்களுடன் மட்டுமே நடத்த அனுமதி வழங்கப்படுகின்றது.

அண்மைக் காலமாக பல ஆலயங்களில் நடந்த திருவிழாக்கள் மூலம் கொரோனா தொற்று மிக வேகமாக பரவியதை சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

இரண்டாவதாக பொதுமக்கள் பொது இடங்களுக்கு செல்கின்றவேளைகளில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றவேண்டும். முகக்கவசங்களை சரியான முறையில் அணிந்திருக்கவேண்டும். கைகளை கிரமமாக தொற்று நீக்கம் செய்ய வேண்டும். சமூக இடைவெளியை பின்பற்ற வேண்டும்.

மூன்றாவதாக பொதுமக்கள் கட்டாயமாக தமக்குரிய தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவேண்டும். தற்போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ஆகிய மாவட்டங்களில் சினோபாம் முதலாவது தடுப்பூசி ஏற்றும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நேற்று முன் தினம் மாலை வரை வடமாகாணத்தில் 462771 பேருக்கு முதலாவது தடுப்பூசி வழங்கப்பட்டது. இது வடமாகாணத்தில் உள்ள 30 வயதிற்கு மேற்பட்ட சனத்தொகையில் 70 வீதமாகும். நேற்று முன் தினம் மாலை வரை யாழ் மாவட்டத்தில் 243400 (70வீதம்) பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 48564 (67வீதம்) பேரும் மன்னார் மாவட்டத்தில் 52532 (67வீதம்) பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 4032 (69வீதம் ) பேரும் வவுனியா மாவட்டத்தில் 73243 (74வீதம்) பேரும் முதலாவது தடுப்பூசியைப்பெற்றுக்கொண்டுள்ளனர்.

வடமாகாணத்தில் இன்னமும் 30 வயதிற்கு மேற்பட்ட ஏறத்தாழ 200,000 பேர் முதலாவது தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தற்போது உள்ள தீவிரமான கொரோனா பரம்பல் சூழ்நிலையில் பரம்பலை கட்டுப்படுத்தவும் இறப்புக்களை குறைக்கவும் எம்மிடம் உள்ள முக்கியமான உபாயம் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதே.

இனிமேல் வைத்தியசாலைகளுக்கும் பொது இடங்களுக்குச் செல்வதற்கும் பொது போக்குவரத்துகளில் பயணிப்பதற்கும் தடுப்பூசி ஏற்றிக் கொள்வது கட்டாயமாக்கப்படலாம். எனவே இதுவரை தடுப்பூசி ஏற்றுக்கொள்ளாத 30 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் உடனடியாக தடுப்பூசியை பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்-என்றார்.

## தடுப்பூசி...

களும் குறித்த தடுப்பூசியை பெற்றுக் கொண்டனர். தடுப்பூசியை எற்றல் தொடர்பான மருத்துவர்களின் விளக்கமளிப்புக்களுடன் கைதிகளுக்கு ஊசி ஏற்றும் நடவடிக்கை இடம்பெற்றுள்ளதாக அரசியல் கைதிகளின் உறவுகள் குரலற்றவர்களின் குரல் அமைப்புக்குத் தெரிவித்தனர்.

கோவிட் 19 தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கான சுயவிருப்ப ஒப்புதல் படிவம் ஒன்று நிரப்பப்பட்டு கையொப்பம் பெறப்பட்ட பின்னரே அவர்களுக்கான ஊசி ஏற்றப்பட்டுள்ளது. மேலும் இரண்டாவது தடுப்பூசியை ஏற்றுவது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

நாட்டில் கொரோனா தொற்று அதிகரித்து வரும் நிலையில் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளுக்கு தடுப்பூசியை வழங்குமாறு அவர்களின் உறவுகள் அரசிடம் பலமுறை கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வேகமாக...

ஐ.டி.எச்., இரத்தினபுரி, கராப்பிட்டிய மற்றும் ராகமை ஆகிய 4 வைத்தியசாலைகளில் அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டு, ஒட்சிசனுக்குப் பெரும் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ள நிலையில், கொரோனா மரணங்களின் தொகையும் தீவிரமாக அதிகரித்து வருவதையிட்டு சுகாதாரப் பகுதியினர் கடுமையான எச்சரிக்கையை வெளியிட்டுள்ளார்கள்.

நேற்றுமுன்தினம் மரணமடைந்த 94 பேரில் 49 பேர் ஆண்கள் எனவும், 45 பேர் பெண்கள் எனவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. 73 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள். 19 பேர் 30 வயது முதல் 59 வயது வரையிலானவர்கள். இருவர் 30 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 தினங்களில் மரணமடைந்தவர்களின் தொகை சடுதியாக அதிகரித்துவருவதும் கவனிக்கத்தக்கது. திங்கட்கிழமை 74 பேர் மரணமடைந்த நிலையில், செவ்வாய்கிழமை 82 பேர் மரணமடைந்தனர். இந்த நிலையில் புதன்கிழமை 94 பேர் மரணமடைந்தனர் நேற்றிரவு அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இதனால், கொரோனாவினால் மரணமடைந்தவர்களின் தொகை 4 ஆயிரத்து 821 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நேற்று 2 ஆயிரத்து 669 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

## யாழ்ப்பாணத்தில்...

சேர்ந்த 67 வயதுடைய ஆண் ஒருவரும் புங்குடுதீவைச் சேர்ந்த 71 வயதுடைய பெண் ஒருவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 134ஆக உயர்வடைந்துள்ளது.

## யாழ்.குடாநாட்டில்...

காணப்பட்டுள்ளனர்.

யாழ். போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் தெல்லிப்பளை ஆதாரவைத்தியசாலையில் 09 மாத ஆண்குழந்தை ஒன்று உட்பட யாழ். மாவட்டத்தில் 48 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலையில் 31 பேர்,

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் 10 பேர்,

தெல்லிப்பளை ஆதார வைத்திய அதிகாரி பிரிவில் 03 பேர் (03 மாதக் குழந்தை ஒன்றும் உள்ளடக்கம்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒருவர்,

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர்,

சங்கான பிரதேச வைத்தியசாலையில் 02 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக ஆய்வுகூடப் பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் 49 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 18 பேர்,

கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 13 பேர்,

உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் 15 பேர் தொற்றாளர்களாக அடை யாளம் காணப்பட்டுள்ளனர்.

## சிகிச்சை பெறும்...

இந்தச் சூழ்நிலையைக் கட்டுப்படுத்த வேண்டும் என்றால், பயணக் கட்டுப்பாடுகளை முடிந்தவரை அமுல்படுத்த வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். வைத்தியசாலை வார்ட்களில் நோயாளர்கள் நிரம்பியுள்ளதாகவும், பொது மக்கள் சுகாதார விதி முறைகளைச் சரியாகப் பின்பற்றுவதாகத் தெரியவில்லை என்றும் வைத்திய நிபுணர் பத்மா குணரத்ன தெரிவித்தார்.

இதையடுத்து, நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனா தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 21 ஆயிரத்து 424 ஆக அதிகரித்துள்ளது.

## வடக்கு மீனவர்களின்...

சாட்டினார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

மேலும், ஆசிரியர் சங்கத்தின் போராட்டங்கள் நியாயமாக முன்னெடுக்கப்படுகின்றன. அவர்கள் உடனடியாக சம்பள அதிகரிப்பை கேட்கவில்லை, சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே அவர்களின் கோரிக்கையாக உள்ளது. ஆனால், அவர்களின் கோரிக்கை நியாயமற்றது எனவும், நாட்டின் பொருளாதார நிலைமையில் இதனை கேட்பது மோசமானதென கூறுவதும் தவறானது. அவர்கள் உடனடியாக தமது கோரிக்கையை நிறைவேற்ற வேண்டும் என கூறவில்லை.

இதேபோல் வடக்கு, கிழக்கின் மீனவர்கள் இன்று பெரும் நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலை ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு மீனவர்களின் ஆக்கிரமிப்பு காரணமாக எமது மீனவர்களின் சொத்துக்கள் அழிக்கப்படும் நிலை ஏற்பட்டுள்ளது. கடந்த 22 ஆம் திகதியில் இருந்து சில தினங்களாகவே இந்திய மீனவர்கள் எமது கடல் எல்லைக்குள் நுழைந்து எமது மீனவர்களின் வலைகளை சேதப்படுத்தியுள்ளனர்.

மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் கடல் பரப்பில் இவ்வாறான அழிவுகள் இடம்பெற்றுள்ளன. 27 மீனவர்களின் சொத்துக்கள் இவ்வாறு அழிக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 277 மீன் வலைகளும் அழிக்கப்பட்டுள்ளன. இதனால் மொத்தமாக 40 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் நாசமாகியுள்ளன.

எனவே, எமது மக்களுக்கு வாழ்வாதார பாதுகாப்பை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## திருவிழாவில்...

கொரோனா உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அந்த கிராமசேவகர் பிரிவான வந்தாறுமூலை கிழக்கு கிராம சேவகர் பிரிவை முடக்கி தனிமைப்படுத்துவதற்கு தேசிய கொரோனா செயலணிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாக செங்கலடி பிரதேச பொது சுகாதார பரிசோதகர் சிவசேகரன் சிவகாந்தன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், “செங்கலடி பிரதேச சுகாதார அதிகாரி பிரிவிலுள்ள குறித்த ஆலயத்தின் உற்சவத்தை நடத்துவது தொடர்பாக சுகாதாரத்துறையிடம் அனுமதியைக் கோரியபோது 15 பேருடன் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி உற்சவத்தை நடத்த அனுமதியளிக்கப்பட்டது.

எனினும் குறித்த அனுமதியை மீறி இறுதிநாள் உற்சவத்தில் பெரும் திரளான மக்கள் பங்கேற்க ஆலய நிர்வாகம் அனுமதியளித்ததையடுத்து அங்கு பெரும் திரளான மக்கள் உற்சவத்தில் பங்குகொண்டுள்ளனர். இதன்போதே அவர்களுக்கு தொற்று ஏற்பட்டுள்ளது - என்றார்.

## அரச ஊழியர்களை...

சுற்றுநிரூபம் விரைவில் வெளியிடப்படும் என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

கோவிட் ஒழிப்புக்கான ஜனாதிபதி செயலணியை கலைக்குமாறும் அது பயனற்றது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளமையை நிராகரிக்கிறோம். கொரோனா தொற்றை கட்டுப்படுத்துவதில் மிகவும் வினைத்திறன் மிக்க பணியை இந்தச் செயலணி ஆற்றியுள்ளதுடன், ஆரம்பத்தில் ஜனாதிபதியே இச்செயலணிக்கு தலைமையும் தாங்கி வழிநடத்தியிருந்தார்- என்றும் அவர் கூறினார்.

ஈழநாடு
Eelanadu

# மந்திகை மரக்கறி சந்தை நேற்றுடன் முடக்கப்பட்டது!

வடமராட்சி, ஓக.06

**பருத்தித்துறை மரக்கறி சந்தை நேற்று முதல் முடக்கப் பட்டது. இதனால், இன்று வெள்ளிக்கிழமை முதல் மரக்கறி சந்தை இயங்காது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.**

பருத்தித்துறை பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழுள்ள மந்திகை பொதுச் சந்தையில் நேற்று பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொள்ளப் பட்டது. இதன்போது, மரக்கறி வியாபாரிகள் இருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதையடுத்து மரக்கறி சந்தையில் விற்பனையில் ஈடுபட்ட அனைத்து வியாபாரிகளும் கட்டாய தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.இதேவேளை, மீன்சந்தை, சந்தையினுள் இயங்கும் பலசரக்குக் கடைகள் என்பன இயங்கும் என்று பருத்தித்துறை பிரதேச சபை அறிவித்துள்ளது. (ஐ-02)

## தயவு செய்து மக்கள் அனைவரும் தடுப்பூசி போட்டுக்கொள்ளுங்கள்

**சபையில் கோரினார் இராஜாங்க அமைச்சர்**

கொழும்பு, ஓக. 06

“கொரோனா தடுப்பூசியால் மட்டுமே எமது உயிரை பாதுகாக்க முடியும். எனவே, தயவு செய்து அனைவரும் தடுப்பூசிகளை போட் டுக் கொள்ளுங்கள். எமக்கு மக்களின் உயிர் முக்கியம்”, என்று இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை அரச தரப்பு பாராளுமன்ற உறுப்பினர் சாந்த பண்டார, “கொரோனா மற்றும் தடுப்பூசிகளுக்காக அரசு இது வரை செலவிட்ட தொகை எவ்வளவு?”, என்ற கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

கொரோனா மற்றும் தடுப்பூசிகளுக்காக அரசு இது வரை 2 இலட்சத்து 50 ஆயிரம் கோடி ரூபாய்வரையில் செலவிட்டுள்ளது. கொரோனா தடுப்பூசியால் மட்டுமே எமது உயிரை பாதுகாக்க முடியும் என்பதனால் அரசு செலவுகளைப் பற்றி கவலைப்படவில்லை. ஏனெனில், எமக்கு எமது மக்களின் உயிர் முக்கியம்.

எதிர்க் கட்சித் தலைவர்கூட கொரோனா தடுப்பூசி போட்டுள்ளார். அவர் நீண்ட ஆயுளுடன் இருக்க வேண்டும். அவரைப் போன்றே அனைவரும் கொரோனா தடுப்பூசிகளை போட வேண்டும். அதன் மூலம் எமது உயிர்களை பாதுகாத்துக்கொள்ள முடியும்”, என்றும் அவர் மேலும் சொன்னார். (இ)

## ஈஸ்டர் தாக்குதல் சந்தேகநபர்கள் 10 மாதத்தின் பின் நீதிமன்றில் ஆஜர்!

மட்டக்களப்பு, ஓக. 06

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பில் கைதாகி தடுத்து வைக் கப்பட்டுள்ள 62 சந்தேகநபர்களும் 10 மாதங்களின் பின்னர் நேற்று மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இவர்கள் பலத்த பாதுகாப்புக்கு மத்தியிலேயே மன்றில் முற்படுத்தப்பட்டனர்.

இதன்போது, தாக்குதல் குற்ற சந்தேகநபர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக் குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த 21.4.2019 ஆம் ஆண்டு உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதல்களின் பின்னர், சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் அம்பாந் தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியைச் சேர்ந்த 63 பேர் கைது செய்யப்பட்டனர்.

இவர்களில் 5 பேர் பிணையில் விடுவிக்கப்பட்டு, பின்னர், இருவர் வழக்கிலிருந்து விடுவிக்கப்பட் டுள்ளனர். இந்நிலையில் 56 பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக் கப்பட்டுள்ளனர்

இந்த 56 பேருடன் குண்டுதாக் குதல் தொடர்பாக வெவ்வேறு 4 வழக்கு இலக்கங்களை கொண்ட சஹ்ரானின் சகோதரி, அவரின் கணவர், சியோன் தேவாலய தற்கொலை குண்டு தாக்குதலை மேற் கொண்ட ஆசாத்தின் தாயார் மற் றும் சந்தேகத்தின்பேரில் கைது செய் யப்பட்டவர்கள் 6 பேர் உட்பட 62 பேரும் தொடர்ந்து விளக்கமறிய லில் வைக்கப்பட்டுள்ளனர்.

அநுராதபுரம், கேகாலை, பொல நறுவை, திருகோணமலை போன்ற பல சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இவர்கள் 7 பஸ்களில் பலத்த பாதுகாப்புக்கு மத்தியில் நீதிமன்றுக்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். இதேவேளை, சந்தேகநபர்களை பார்வையிடுவ தற்காக அவர்களது உறவினர்கள் நீதிமன்றத்தின் வெளியில் கூடியி ருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மரண அறிவித்தல்



மலர்வு 22 - 06 - 1933

உதிர்வு 01 - 08 - 2021

### குணரத்தினம் கார்த்திகேசு

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், கொழும்பு, அவுஸ் திரேலியாவின் சிட்னி ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட குணரத்தினம் கார்த்திகேசு கடந்த (01.08.2021) ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு – இரா சம்மா தம்பதியரின் ஏக புதல்வரும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை – தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மரு மகனும், கருணேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும், சுரேகா, சுரேந்திரா, பாலேந்திரா, சத்தியேந்திரா, கஜேந்திரா ஆகியோரின் பாசமிகு தந்தையும்,சுகுமார், நிக்கி, ஹேம லதா, ஹொங், சோபனா ஆகியோரின் அன்பு மாமனா ரும்,காலஞ்சென்ற மகேஸ்வரி, ஞானேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும், காலஞ்சென்றவர்களான பொன்னுத் துரை, நடராசா ஆகியோரின் அன்பு மைத்துனரும், காலஞ் சென்றவர்களான கமலேஸ்வரி, மகேஸ்வரி மற்றும் சிவ னேஸ்வரி, காலஞ்சென்ற சிவலிங்கம், லீலாநந்தேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசு, ரெட்ணேஸ்வரி, காலஞ் சென்ற தனலெட்சுமி ஆகியோரின் அன்புச் சகலனும், Dr. சரணியா, ஷோபியா, சரண், ரூபேஷ், ஆதேஷ், சொபியா, ரயன், சனந்தேஷ் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

**கிரியை**
Monday, 09 Aug 2021 9:00 AM - 11:30 AM
Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd &, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia

**தகனம்**
Monday, 09 Aug 2021 11:30 AM - 11:45 AM
Macquarie Park Cemetery and Crematorium Cnr Delhi Rd &, Plassey Rd, Macquarie Park NSW 2113, Australia

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இறுதிநிகழ்வில் மட்டுபடுத்தப்பட்ட குடும்ப உறுப்பினர் கள் மாத்திரமே பங்கு கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு :
**பாலேந்திரா - மகன்**
**Mobile : +61490778630**

தகவல்
**குடும்பத்தினர்.**

## உடல்நிலையை கருத்தில்கொண்டே தடுப்பூசியை பெற்றுக்கொண்டேன்!

*பாராளுமன்றில் சஜித் பிரேமதாஸ*

கொழும்பு, ஓக. 06

“எனது உடல்நிலை குறித்து மருத் துவர்கள் வழங்கிய ஆலோசனைக் கமையவே நான் கொரோனா தடுப் பூசியை பெற்றுக்கொண்டேன்”, என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

எதிர்க்கட்சித் தலைவர் கொரோனா தடுப்பூசி போட்டுக்கொண்டமை தொடர்பில் பாராளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்த கருத்துக்குப் பதிலளிக் கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“நாட்டில் அனைவருக்கும் தடுப் பூசியை ஏற்றிய பின்னரே தான் தடுப்பூசியை ஏற்றிக்கொள்வேன் என்று எதிர்க்கட்சித் தலைவர் கூறியிருந்தார். ஆனால், அவர் இப்போது அதனை ஏற்றிக் கொண்டுள்ளார். இவர் பலவீனமாக இருக்கிறாரென இவரின் மருத்துவர்கள் கூறியுள்ளனர்.” என்று ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த சஜித் பிரேமதாஸ, “நான் தடுப் பூசியை பெற்றது தொடர் பாக அமைச்சர் குறிப்பிட் டுள்ளார். ஆனால், எனக்கு கொரோனா தொற்றிய பின்னர் கடந்த ஒரு வாரத் திற்கு முன்னர் மருத்து வர்களால் எனது தற் போதைய உடல் நிலை



மையில் தடுப்பூசியை பெற்றுக்கொள்ளாவிட்டால் என்னை பொறுப்பேற்க முடியாது போகும் என்று கூறிய நிலையிலேயே, நான் தடுப்பூசியை பெற்றுக்கொண்டேன். ஆனால், பெருமளவானவர்களுக்கு தடுப்பூசிகளை வழங்கிய பின்னரே அதனை போட்டுக்கொண்டுள்ளேன். வரிசையில் முந்திச் செல்லாது அதனை பெற்றுக்கொண்டமை தொடர்பில் நான் பெருமையடை கின்றேன்”, என்றார். (இ)

## வடமராட்சியில் வழிப்பறி கொள்ளையர் கைவரிசை

வடமராட்சி, ஓக.06

மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் நேற்று நெல்லி யடியில் இரு இடங்களில் வழிப் பறியில் ஈடுபட்டுள்ளனர்.

வடமராட்சி - நெல்லியடி - மாலைசந்தை பகுதியில் முற் பகல்வேளை பெண் ஒருவரின் தங்கச்சங்கிலி ஒன்று அறுக் கப்பட்டது. அந்தப் பெண் ணின் சுதாகரித்துக் கொண்ட நிலையில், சங்கிலியின் அரை வாசியையே அவரால் காப்பாற்ற முடிந்தது.

இதேசமயம், இமையாணன் எரிபொருள் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள வர்த்தக நிலையத்தில் பொருட்கள் வாங் கிக் கொண்டிருந்த பெண் ஒருவ ரின் தாலிக் கொடியையும் வழிப் பறி கொள்ளையர்கள் அறுத்துச் சென்றுள்ளனர். இதன்போதும் தாலிக் கொடியின் ஒரு பகு தியே கொள்ளையர்களால் அறுக்கப்பட்டுள்ளது. (ஐ-02)




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 06.08.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**DAN தமிழ் ஒளி**

**காலை**
6.00 மணி : பக்திபாடல்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
07.05 மணி : உளவியல் கருத்து-உளவள துணையாளர் திரு.நா.நவராஜ்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகள்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை- நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : மாதம் ஒரு இசைக்குழு-மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை




1.00 மணி : துறைக்கு அப்பால் (மறுஒளிபரப்பு)
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்- திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி
5.30 மணி : Short Film
6.00 மணி : ஹொலிவுட் சுப்பர் 10




**இரவு**
7.00 மணி : ரசிகன் என்கின்ற தலைவன்- நகைச்சுவை நிகழ்ச்சி




8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம்-பத்திரிகை பகுதி-02



10.00 மணி : நேருக்கு நேர்

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : திரைப்படம்

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் வடிவேல் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : திரைப்படம்
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : க.பொ.த உயர்தரம் - விவசாயம்
6.00 மணி : க.பொ.த உயர்தரம் - வணிகம்
6.45 மணி : க.பொ.த உயர்தரம் - உயிரியல்
7.30 மணி : க.பொ.த உயர்தரம் - பொருளியல்
8.15 மணி : க.பொ.த உயர்தரம் - கணக்கீடு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப் பிரிவு) விஞ்ஞானம்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) மறு ஒளிபரப்பு
1.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
2.00 மணி : தரம் 5 சுற்றாடல்
3.00 மணி : தரம் 5 கணிதம்
4.00 மணி : தரம் 6 - 9 ஆங்கிலம்
5.00 மணி : பொது சிங்களம்
6.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த. சாதாரண தர மாதிரி வினாத்தாள்

**ரிவி (ஐ ரிவி)**

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.00 மணி : திருப்பலிப்பாடல்கள்
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபமாலை

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்சிந்தனை
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்
10.30 மணி : கலந்துரையாடல்